Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (22-6-66) இதழ் 135

பராபவ ஆனி 8 ரபி அவ் 2 புதன்கிழமை



காலத்திற்கேற்ற முறையில் தங்கப் பவுண் நகைகளை தயாரித்தளிக்கும் புதிய ஸ்தாபனம்

**நிர்மலா ஜுவல்லர்ஸ்**

(உரிமையாளர்: தா. இராசரத்தினம்)

கே. கே. எஸ். ரோட், - சுன்னாகம்.

ஓடர் நகைகள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

## பார்படோஸ் சுதந்திரம்

லண்டன், ஜூன் 21

மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான பார்படோசுக்கு சுதந்திரம் வழங்குவது சம்பந்தமான அரசியல் மகாநாடு லண்டனில் ஆரம்பமாகியுள்ளது. மேற்கிந்திய கிரிக்கெட் வீரர்களில் பெரும்பாலோரை இத்தீவு தான் சப்ளை செய்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# தனியார் பாடசாலைகளிலும் பிறமத போதனை அரசாங்கம் கட்டாயப்படுத்தும்

கொழும்பு, செவ்.

தனிப்பட்ட பாடசாலைகளிலும் இனிமேல் சமய பாடம் படிப்பிக்கப்பட வேண்டும். பாடசாலையை எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்கள் நிர்வகித்தாலும்சரி, அப்பாடசாலையில் பிறமதத்தைச்சேர்ந்த மாணவர் தொகை பதினைந்துக்கு மேல் இருக்குமானால் அந்த பிறமதத்துக்கான சமய பாடம்படிப்பிக்கவேண்டும். ஐந்து வயது தொடக்கம் 14 வயதுவரையான சகல மாணவர்களுக்கும் சமய பாடம் புகட்டப்படவேண்டும் என அரசாங்கம் தனியார் பாடசாலைகளை கட்டாயப்படுத்தவிருக்கிறது.

குறிப்பிட்ட சமயபாடத்தை அந்த மதத்தைச் சேர்ந்த ஆசிரியர் அதுவும் கல்வி இலாகாவினால் குறிப்பிட்ட பாடத்தைக்கற்பிக்கத்தகுதி பெற்றவர் என அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஆசிரியரைக் கொண்டே பயிற்றுவிக்க வேண்டும்.

தற்பொழுதுடியூட்டரிகள் தவிர்ந்த ஏனைய தனியார் பாடசாலைகளில் பெரும்பான்மையானவை கிறிஸ்தவ மதத்தினரின் நிர்வாகத்தின்கீழ் இயங்கிவருகின்றன. இவற்றில் கிறிஸ்தவ மதம்மட்டுமே பயிற்றுவிக்கப்படுகிறது.

## வெளியில் விட்டுவைப்பதே சமூகத்துக்கு ஆபத்து

### பெண்ணுக்கு சிறைத்தண்டனை விதித்த நீதிபதி கருத்து

யாழ்ப்பாணம், புதன்

'உன்னைப் போன்றவர்களால் இப்பகுதி வாலிபர்களுக்கும் சமூகத்திற்கும் கேடு விளையக்கூடியதாயிருக்கும். ஆகவே சமூகத்தினரிடமிருந்து பிரித்து உன்னைச் சில காலம் சிறையில் வைத்திருக்கவேண்டும்.'

மடுரோட்டைச் சேர்ந்த தெய்வானை என்ற பெண்ணுக்குச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கும்போது நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

மடுரோட்டைச் சேர்ந்த இராமதாஸ் பெண் தெய்வானை, திருநெல்வேலியில் உள்ள ஒரு வீட்டில் சுப்பர் சின்னத்துரை என்பவருடன் தனிமையில் இருந்ததற்கு விளக்கம் கூறமுடியாததற்கும், அவ்வீட்டிற்குள் அத்துமீறிப் பிரவேசித்ததற்கும், குற்றவாளியாகக் காணப்பட்டு. ஒவ்வொரு குற்றத்திற்கும் 3 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இராமதாஸ் பெண் தெய்வானை, பொலிஸ் பெண் பாதுகாவலரைப் பேசியதாக மற்றொரு குற்றச்சாட்டின் மீது தொடரப்பட்ட மற்றொரு வழக்கில் ஒரு மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரிக் கட்டிட நிதிக்காக

அமெரிக்கா, பிரிட்டன், சிங்கப்பூர், யப்பான் ஆகிய நாடுகளில் பரதநாட்டியம், குச்சிப்புடி, ஆந்திர நடனங்கள் ஆகியவற்றை நிகழ்த்திப் புகழீட்டிய

பிரபல தென்னிந்திய நடனமணிகள்

**தேஜஸ்வினி — பங்கஜம்**

குழுவினர் அளிக்கும்

**பரத நாட்டிய விருந்து**

28—6—66 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில்

சாவகச்சேரி இந்துக்கல்லூரி சுப்பிரமணியம் அரங்கிலும்

30—6—66 வியாழக்கிழமை மாலை 6 மணியளவில்

யாழ்ப்பாணம் நகரமண்டபத்திலும்

2—7—66 சனிக்கிழமை மாலை 6 மணியளவில்

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும்

மேற்படி கல்லூரிப் பழையமாணவர்களின் ஆதரவில் நடைபெறவிருக்கின்றது.

நுழைவுக் கட்டணம். ரூபா 25, 10, 5, 3

மாணவர்களுக்கு. ரூபா 2.

## இலங்கை வரும் பிரிட்டிஷ் பேராசிரியர்

பம்பலப்பிட்டி, செவ்.

லண்டன் பல்கலைக்கழகத்தின் இம்பீரியல் விஞ்ஞான தொழில் நுட்பக் கல்லூரியின் பேராசிரியர் சேர் பற்றிக் லின்ஸ்ரெட் இலங்கை வருவார் இவர் இம்மாதம் 28 ம் திகதி பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ''ஐம்பது வருடங்களில் இரசாயனம்'' என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார். இலங்கை விஞ்ஞான அபிவிருத்திச் சங்கப் பிரமுகர்களைச் சந்திப்பார். வித்தியோதயப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானக் கல்வி போதனையையும் பேராசிரியர் பார்வையிடுவார்.

## யாழ்ப்பாணம் வந்த பொலிஸ் அதிகாரி

யாழ்ப்பாணம், புதன்

தென்மாகாணப் பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. வான் சென்டன் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு திடீர் விஜயம் செய்தார். திரு. வான்சன்டன் முழுவதும் பொலிஸ் உடையிலேயே காணப்பட்டார்.

கோதபாயா கொலை சம்பந்தமாக யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரை விசாரணை செய்வது சம்பந்தமாகவே இவர் திடீர் விஜயத்தை மேக்கொண்டார் எனச் சொல்லப்படுகிறது. மேலும் பல விபரங்கள் சேகரிக்கப்பட இருப்பதால் குறிப்பிட்ட விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ந நி

## வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

பலாத்கார முயற்சி வழக்கில், எதிரிதாம்சுற்றவாளியெனத் தெரிவித்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே ராஜரத்தினம் நேற்றுக்காலை விசாரணையை ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தங்கம்மா என்ற பெண்ணை செல்லையா போசசுந்தரம் என்பவர், பலாத்காரம் செய்ய முயற்சித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது

எதிரிசார்பில் புரக்டர் தளையசிங்கம் தியாகநாதன் ஆஜரானார். நீதிபதி செப்டம்பர் 27-ம் திகதிவரை வழக்கை ஒத்திவைத்தார்.

## கல்முனைப் பட்டினசபை தலைவராக தமிழர் தெரிவு

கல்முனை, செவ்வாய்

கல்முனை பட்டினசபையின் புதிய தலைவராக திரு எம். தம்பிப்பிள்ளை தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பத்துவருடங்களின் பின் இப்பொழுதுதான் தமிழர் ஒருவர் இப்பட்டினசபைக்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

தமிழரசுக்கட்சியின் பத்தாவது தேசிய மகாநாடு இம்மாதம் 23ந் திகதி முதல் 25ந் திகதிவரை கல்முனையில் நடைபெறவிருக்கும் இச் சமயத்தில் தமிழரசுக்கட்சியின் ஆதரவாளரான திரு. தம்பிப்பிள்ளை கல்முனைப் பட்டினசபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பது தமிழரசுக்கட்சியினருக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது.

பெப்பிரவரி சதி

## சந்தேக நபர்களை உறவினர் சந்திக்கலாம்!

### மூன்று மாதங்களுக்குப் பின் ஏற்பட்டுள்ள வாய்ப்பு!

கொழும்பு. செவ்

பெப்ரவரி மாதம் முறியடிக்கப்பட்ட சதியில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் சந்தேக நபர்கள் 3 மாதகாலத்துக்குப் பின் தங்கள் உறவினரைச் சந்திக்கும் பெரும் வாய்ப்பைப் பெறுவிள்ளனர்.

சந்தேகத்தின்மீது சென்ற பெப்ரவரி மாதம் தொடக்கம் பாதுகாப்பு மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இதுவரை காலமும் அவர்களைப் பார்ப்பதற்கு உறவினர்களும், நண்பர்களும் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் இப்போது அந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது. மற்றக் கைதிகளைச் சந்திப்பதுபோல் இவர்களின் உறவினர்கள் இனி சந்தேகநபர்களைச் சந்திக்கலாம். ஆனால் சந்தேகநபர்களை அவர்களது வழக்கறிஞர்கள் சந்திக்கமுடியாது என்ற கட்டுப்பாட்டில் மாற்றமெதுவும் இல்லை.

சதி சந்தேகநபர்களை உறவினர்கள், நண்பர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோர் சந்திப்பதற்குத் தடைவிதித்ததை ஆட்சேபித்து சர்வதேச ஜூரிகள்சபை இலங்கைக் கிளை சென்ற வாரம் பிரதமரிடம் ஆட்சேபம் தெரிவித்திருந்தது.

## சாரணர் இயக்கத்தில் புதிய திட்டம் வேண்டும்

### பிரதம ஆணையாளர் கருத்து

யாழ்ப்பாணம், புதன்

சாரணர் இயக்கம் யாழ்ப்பாணத்தில் மிகவும்வளர்ச்சியடைந்து இருப்பதுபற்றி மகிழ்ச்சியடைகிறேன். இவ்வியக்கம் சகல பாடசாலைகளுக்கும் பரவி சகோதரத்துவத்தை நிலைநாட்டி எல்லாப் பகுதிகளிலும் சமாதானத்தை நிலவச்செய்ய ஏதுவாகும். நீண்டகாலக் கைதிகள்கூட இவ்வியக்கத்தில் சேர்ந்துள்ளனர். அவ்விதம் இவ்வியக்கத்தில் சேர்ந்ததனால் அவர்கள் நாட்டிற்கு சிறந்த சேவை செய்யக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள்.

அகில இலங்கை சாரணர் இயக்கத்தின் பிரதம ஆணையாளர் ஈ. டபிள்யு. கன்னங்கரா யாழ்ப்பாணம் மாவட்ட சாரணர் சங்கத்தின் 50-வது வருட கொண்டாட்டத்திற்காக ஒழுங்கு செய்யப்பட்ட வைபவத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வைபவம் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. டாக்டர் வி. ரி. பசுபதி தலைமை தாங்கினார்.

திரு கன்னங்கரா மேலும் கூறியதாவது: திருநாட்டின் சாரணர் இயக்கத்தை வளர்ச்சியடையச் செய்து வாலிபர்கள் எல்லோரையும் இவ்வியக்கத்தில் சேர்த்து தற்கால வாலிபர்களின் வாழ்க்கையைத் திருத்தி அமைப்பதற்கு அவசரம்ஒரு திட்டம் வகுக்க வேண்டும்.

நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யு தம்பையா கியூ.சி. பேசுகையில் கூறியதாவது: மேலைத்தேசத்தின் சிறந்த அம்சங்களைக் கனித்துப் பின்பற்றிக்கொண்டு வரும் யாழ்ப்பாண மக்களுள், சாரண இயக்கம், நன்கு பரவிவருவதுபற்றி மகிழ்ச்சி அடைகிறேன். யாழ்ப்பாணப் பாடசாலைகள் அகில இலங்கை பரிசுகளில் கூடியவற்றைச்சென்ற சில காலமாகப் பெற்றுக்கொண்டு வருவதை நான் போற்றுகிறேன். குறிப்பாக சென்ற ஆண்டு கொக்குவில் இந்துக் கல்லூரி நான்கு அகில இலங்கைப்பரிசுகளுள் மூன்றைத் தாம் பெற்றுக்கொண்டதையும், அவர்களுள் 21 இராணி சாரணர்களாக இருக்கும் தகுதியைப் பெற்றதையும் நான் பாராட்டுகிறேன்.

இன்றும் நாகரீகமற்ற முறையில் கத்தி உபயோகிக்கும்தன்மை எம்மவருள்

(5-ம்பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## வாடகைக்கு

கடை

நல்லூர் மார்க்கெட்டுக்கு முன்னால் பலசரக்கு வியாபாரம் நடைபெறும் கடை ஆனை மார்க் சோடா சப் ஏஜென்சியுடன் வாடகைக்கு உண்டு. விபரங்கட்கு விஜயா ஸ்ரோர்ஸ் பருத்தித்துறை வீதி, நல்லூர். 578

அறைகள்

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் இரண்டு அறைகளுடன் வீட்டின் ஒரு பகுதி வாடகைக்குத் தேவை. யாழ். கொன்சல் டேட்டிவ் சேவிஸஸ், 19, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். (585)

## விற்பனைக்கு

நாய்க்குட்டிகள்

7 வாரம் பூர்த்தியாகிய P. B. ஆண் பெண் அல்சேஷன் நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தியாகராஜா தேவராசா மானிப்பாய் வடக்கு என்ற விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும். 577

காணி

மூன்றரை பரப்புக் காணி நாவலர் வீதிக்கு அருகாமையில் புது அத்தியடி வீதியில் விற்பனைக்கு உள்ளது இலக்கம் 272, நாவலர்வீதி யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 573

இயந்திரம்

நெசவு செய்வதற்கு (Warp) பா ஓடுவதற்குத் தேவையான நம்பர் எண்ணக்கூடியஇயந்திரம்(Counting Machine) விற்பனைக்கு உண்டு. கிடைக்குமிடம்: M.போல், பா ஓடும் நிலையம், டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். (582)

## தேவை

கொம்போசிட்டர்

எழுத்துக்கள் (கொம்போசிங்) அடுக்குவதற்கும், ஆர்டர்கள் சேகரிப்பதற்கு (சம்பளமும் கமிஷனும்) எல்லா மாகாணங்களிலும் பெண்கள் தேவை. விண்ணப்பிக்கவும். கலாஜோதி, ஆஸ்பத்திரி வீதி, பஸ்நிலையத்திற்கு முன்பாக, யாழ்ப்பாணம். (583)

## காணவில்லை

8 கூப்பன்கள்

மருதனமடம் சந்தையில் கதிரிப்பிள்ளை, நாச்சிப்பிள்ளை, சுப்பிரமணியம், சிவலிங்கம், நடராசா, ராசரத்தினம் என்ற பெயர்களுட்டய கூப்பன்களும் மற்றுமிரு கூப்பன்களும் தவறிவிட்டன. இவற்றிற்குரியவர் மிகவும் வசதியற்றவர். தயவுசெய்து எடுப்பவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (584)

## கல்வி

வகுப்புகள்:

எதிரே வரும் க. பொ. த. (சாதாரணம்) ஆவணி, மார்கழிப் பரீட்சைக்குத் தோன்றுபவர்களுக்கு கலை, விஞ்ஞானம் (லண்டன், லெங்கை, இந்தியப் பட்டதாரிகளாலும்) கணக்கியல், வர்த்தகம், பொருளாதாரம், பி. கொம் பட்டதாரிகளாலும், சுருக்கெழுத்து, தட்டச்சு 44 வருட அனுபவமுள்ளவராலும் விசேஷ வகுப்புகள் தமிழ்/ஆங்கிலம் இரு பாஷைகளிலும் நடைபெறுகின்றன. நேரில் பார்வையிட்டுச் சேர்ந்து படிக்கவும். வர்த்தகக் கல்லூரி ஸ்தாபிதம்: 1924.; பருத்தித்துறை/வர்த்தகக்கல்லூரி ஸ்தாபிதம்: 1966. வதிரி கரவெட்டி. 580


திங்ஸ்லி பிளாஸா நவா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கும்பனித்தெரு)
வெலிங்டன் விஜயா ஸ்ரீகிருஷ்ண
(யாழ்ப்பாணம்) (அம்பாறை) (திருக்கோணமலை)
விஜிதா கல்யாணி மொடேர்ன்
(ஹட்டன்) (நாவலப்பிட்டி) (பதுளை)
தீவொளி
(நுவரேலியா)



எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமூவிஸ்
தெய்வத்தாய்


# தென்வியட்னும் செல்லும் இலங்கைத் தூதுகோஷ்டி

## பிரதமர் கீயின் அனுமதி கிடைத்து விட்டது?

கொழும்பு, திங்கள்

தென்வியட்னுமில் பௌத்தர்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் ஏற்பட்டுள்ள தகராறுகள் சம்பந்தமாக நேரடியாகச் சென்று பார்வையிடுவதற்காக இலங்கை சமாதான தூதுக்குழுவொன்றுக்கு அனுமதிகோரி இலங்கைவிடுத்த கோரிக்கையை தென்வியட்னும் பிரதமர் காவோகீ ஏற்றுக்கொண்டிருப்பதாக அறியப்படுகின்றது.

தென்வியட்னுமில் பௌத்தர்களுக்கு பெரும் அநீதி இழைக்கப்படுவதாகவும் அது சம்பந்தமாக இலங்கை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் கேட்டுக்கொண்டிருக்கின்றது. அதற்கிடையில் தென்வியட்னுமிலும் ஒரு ராஜீய தூதரை நியமிப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசித்துவருகின்றது.

தென்வியட்னும் செல்லவிருக்கும் தூதுக்குழுவில் ஐ நா.வில் நிரந்தரப்பிரதிநிதியாகவிருக்கும் சேர் செனரத் குணவர்த்தன, பிரிட்டனில் ஸ்தானிகராகவிருக்கும் டாக்டர் ஜி பி மலலசேகரா பாதுகாப்பு வெளிவிவகார, அமைச்சின் வெளிநாட்டு சேவைப்பகுதி அதிகாரி திரு ரி எல் சி ராஜபக்ஸ ஆகியவர்கள் இருப்பர் என்று தெரிகின்றது.

# குடும்பக் கட்டுப்பாடு குறித்து கத்தோலிக்க திருச்சபை முடிவு

## கமிஷன் ஆராய்கிறது

ரோம், ஜூன் 21

16 கருதினல்களும், பிஷப்புகளும் அடங்கிய போப்பாண்டவரின் குடும்பக் கட்டுப்பாட்டுக்கமிஷன், சிக்கலான இப் பிரச்னை பற்றிய கத்தோலிக்க திருச்சபையின் போதனையைத்தளர்த்துவது சம்பந்தமான பேச்சுக்களை ஆரம்பித்திருக்கிறது.

பாப்பரசருக்கு இவ்விஷயமாக சிபார்சு செய்யுமுன் ஒருவாரம் கமிஷன் ஆலோசனை நடத்தும். பிரச்னையின் சகல அம்சங்களையும் குறித்து 500பக்க அறிக்கையை கமிஷன் அங்கத்தினர்கள் பரிசீலித்து வருகிறார்கள் கமிஷனைச் சேர்ந்த 50க்கு மேலான நிபுணர்கள், 3 மாதம் பாடுபட்டுத் தயாரித்த விபரங்களைக் கொண்டது இந்த அறிக்கை.

1963ம் ஆண்டிலிருந்தே ரோமன்கத்தோலிக்க திருச்சபை, இதுபற்றி ஆராய்ந்து வருகிறது.

இவ்விஷயமாக அவசர முடிவு ஒன்று செய்யப்படுவது குறித்து வத்திக்கான் வட்டாரங்கள் எச்சரித்துள்ளன. ஆனல் ஒரு முடிவை ஏற்படுத்துவதில் போப்பாண்டவர் ஆவல்காட்டி வருகிறார். (பி. டி. ஸி.)

## ஐ. தே. க. வெற்றி

தம்பதேனியா, செவ்.

நாரமல பட்டினசபைக்கு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்கள் பெரும்பான்மையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

விபரங்கள் வருமாறு:— லினியவத்தை திரு. கே. ஏ. சுவாமிஸ்சிங்கோ (சுதந்திரக்கட்சி) டெமற்றஹாவெல திரு சி எம் பீ பொகலகம (ஐ தே க), றமுட்டுகல பீ ஸி டயஸ்(ஐ தே க) டம்பெலிசடி எம் புஞ்சிபண்டா (கம்யூனிஸ்ட் கட்சி).

## புதியபஸ் சேவை

மட்டக்களப்பு, செவ்.

இ. போ. ச. மட்டக்களப்பிலிருந்து கதிர்காமம் செல்லும் பிரயாணிகளின் நலனை முன்னிட்டு ஒரு விசேஷபஸ் சேவையை ஆரம்பித்துள்ளது. போயா தினங்களில் இச்சேவை நடாத்தப்படும்.


ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
ஜெமினி --- சாவித்திரி
நடித்த
மாதர்குல மாணிக்கம்

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - சாவித்திரி
நடித்த
நவராத்திரி

REGAL—JAFFNA
NOW SHOWING!
Russ Tamblyn - Maria Granada
in
SON OF A GUNFIGHTER
Cinemascope - Metrocolor


## "விவசாயத்தில் ஈடுபடுங்கள்"

உடுப்பிட்டி. செவ்.

"எமது நாட்டில் உணவுப் பிரச்னை ய பொருளாதாரத்தைக் குறைத்துள்ளது. புதிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதின்மூலம் எம் சுயதேவைகளை ஓரளவு பூர்த்தி செய்யலாம். வேலையற்றிருக்கும் இளைஞர்கள் வேலை தேடி அலைவதைத் தவிர்த்து விவசாயத்துறையில் ஈடுபட்டால் தமக்கு மட்டுமன்றி, நாட்டுக்கும் நன்மை புரிந்தவர்களாவர். உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை இப்பகுதியில் ஓரளவுதான் வெற்றியளித்துள்ளதெனினும், இப்பயிர்ச்செய்கைக்கு நிலத்தைப் பழக்கப்படுத்த வேண்டும்" என்று நெல்லியடி இளைஞர் விவசாயக் கழக ஆலோசனைக் கூட்டத்தில் உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு. மு. கணபதிப்பிள்ளை பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர். இக் கூட்டத்திற்கு திரு. செ. சுவர்ணராசா தலைமைவகித்தார்.

## உதவி ஆடிட்டர் ஜெனரல்

கொழும்பு, செவ்வாய்

திரு. ஆ. குணநாயகம் இம்மாதம் 11-ந் திகதி தொடக்கம் உதவி ஆடிட்டர் ஜெனரலாக அரசாங்க பொதுச்சேவைக் கமிஷனல் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தபால் இலாகாவில் முதன்முதலாகச் சேர்ந்து அவ்விலாகாவில் 16 ஆண்டுகள் கடமையாற்றியுள்ளார். 1951-ம் ஆண்டு கணக்குச் சோதனையாளராக கணக்குச் சோதனை இலாகாவில்சேர்ந்தார். இவ்விலாகாவில் படிப்படியாக உயர்வுபெற்றுள்ளார். 1963—1964-ம் ஆண்டில் கணக்குச்சோதனை இலாகா அதிபதியின் அறிக்கையைத்

# விளம்பரம்

## கேள்விப் பத்திர விளம்பரம்

வலி - கிழக்கு ப. நோ. கூ. ச. சமாசம்
புத்தூர் கிளை

### கட்டிட விஸ்தரிப்பும் திருத்தமும்

மேற்படி வேலைக்கு ஒவ்வொரு பகுதி வேலைக்கும் கூலி ஒப்பந்த விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கூலிக்குரிய வேலைகளின் விபரங்களும் கேள்விப்பத்திரமும் நீர்வேலியிலுள்ள மேற்படி சமாசக் கந்தோரில் ரூபா (25/-) இருபத்தைந்து கட்டி கந்தோர் நேரத்தில் 30-6-66 பிற்பகல் 2மணிக்கு முன்பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 7-7-66 பிற்பகல் 2 மணிக்குமுன் சமாசக் கந்தோரில் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பப்பத்திர உறையின் இடதுபக்கத்தில் 'கட்டிட கேள்விப்பத்திரம்' என எழுதப்படல் வேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்படாத கேள்விப்பத்திர காரர்களுக்கு ரூபா (20/-) இருபது மட்டுமே திருப்பிக்கொடுக்கப்படும்.

க. வீ. கனகசபாபதி
தலைவர்
வலி-கிழ. ப. நோ. கூ. ச. சமாசம்
நீர்வேலி. (616)

## ஏல விற்பனவு விளம்பரம்

வலி - கிழ. ப. நோ. கூ. ச. சமாசம், நீர்வேலி.

மேற்படி சமாசக் கந்தோரில் 28-6-66 காலை 10 மணிக்கு கீழ்க்காணும் பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும்.

### பொருட்களின் விபரம்

1. கட்டிடத்திற்குப் பாவிக்கப்பட்ட மரங்கள்.
2. வெற்றுச் சாக்கும் வெற்று சிமெந்து உறைகளும்.
3. பழுதான துணிகள்.
4. வெற்றுத் தகரங்கள் (1 கலன் ரின்)
5. வேறு பொருட்களும்.

க. வீ. கனகசபாபதி,
தலைவர்
(615)

## 'இந்து இளைஞன்'

### 75-ம் ஆண்டு நிறைவுமலர்

* கல்லூரியின் வளர்ச்சியும் வரலாறும் பற்றிய சிறப்புக் கட்டுரைகள்.
* ஏராளமான படங்கள்.
* கண்கவரும் பதிப்பு.

இத்தனையும் ஒருங்கமைந்த சிறப்புமலரைப் பழைய மாணவர்களும் அபிமானிகளும் பெற்றுக்கொள்ளலாம். யாழ். இந்துக்கல்லூரி அதிபருடன் தொடர்பு கொள்க. (617)

## தாச்சிப்போட்டி

கோண்டாவில், புதன்

இணுவில் சைவமஹாஜன கல்லூரி மைதானத்தில் கல்லூரி மாணவர்களுக்கும் பழைய மாணவர்களுக்குமிடையே நடைபெற்ற தாச்சிப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. போட்டிக்கு திரு. நா. பதஞ்சலி தலைமைவகித்தார்.

தமிழில் மொழிபெயர்த்த பெருமை இவருக்கே உரியது. இம் மொழிபெயர்ப்பு பல தமிழ்அறிஞர்களின் பாராட்டையும் பெற்றதென்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கிழக்கு உலகுடன் புதிய உறவை ஏற்படுத்த பிரான்ஸ் விருப்பம்

# "கிழக்கு-மேற்கு கெடுபிடியை ஒழிக்க முன்வாரீர்?"

## ரஷ்யாவுக்கு பிரெஞ்சு அதிபர் டிகால் நேச அழைப்பு

மாஸ்கோ, ஜூன் 21

ரஷ்யாவுடனும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் புதிய உறவை ஏற்படுத்திக் கொள்ள பிரான்ஸ் விரும்புவதாயும், அமைதி, ஒத்துழைப்பு நோக்கத்தின் அடிப்படையில் இது இருக்கும் என்று பிரெஞ்சு ஜனதிபதி டிகால், கிரம்ளின் மாளிகையில் தமக்களிக்கப்பட்ட ராஜாங்க விருந்தில் பேசியபோது குறிப்பிட்டார்.

ஜனதிபதி டிகால் ரஷ்யாவுக்கு 12 நாள் ராஜாங்க விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார். மாஸ்கோ விமானநிலையத்தில் எந்த மேற்கு நட்டுத் தலைவருக்குமில்லாத பெரும் வரவேற்பு அவருக்களிக்கப்பட்டது. கிழக்கு-மேற்கு உறவுகளுக்கிடையேயான கெடுபிடிக்கும், நேட்டோ-வார்ஸா கெடுபிடிக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்றும் இதற்கு வழி காணுமாறும் டிகால் கேட்டுக் கொண்டார்.

ரஷ்யாவும், பிரான்சும் இன்றுமுதல் ஐரோப்பிய பிரச்னைகளுக்குப் பரிகாரம் காணும் முயற்சியில் ஒத்துழைக்க வேண்டும் என்றும், உலக அரசியலில் அமெரிக்காவின் முக்கிய பங்கை பிரான்ஸ் மதித்தபோதிலும் ஐரோப்பா விஷயமாக உருவான நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணம் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கிறதென்றும் டிகால் கூறினர்.

"நெப்போலியன் காலத்திலும் சரி-கிரீமியா போர்க் காலத்திலும்சரி பிரான்சையும், ரஷ்யாவையும் பிரித்த அடிப்படை விஷயம் இல்லை. சரித்திரமும், பூகோளமும் இருநாடுகளையும் இணைத்திருக்கின்றன" என்றார் டிகால்.

ரஷ்ய ஜனதிபதி பொட்கோர்னி விருந்தில் பேசியபோது, ஐரோப்பாவில் சமாதானத்தையும், ஒத்துழைப்பையும் ஏற்படுத்த ரஷ்ய-பிரெஞ்சு வெளியுறவுக் கொள்கைகள் வழி கண்டுபிடிக்கும் தன்மையைக் கொண்டிருக்கின்றன என்றார்.

இன்றுகாலை டிகால் ரஷ்யத் தலைவர்களான பொட்கோர்னி, பிரஸ்னேவ், கொஸிஜின் ஆகியவர்களுடன் சம்பாஷணை நடத்தினர். பிரதானமாக ஐரோப்பியப் பிரச்னை இதில் இடம் பெற்றதாகக் கூறப்பட்டது.

டிகாலின் விஜயத்தின் போது இருநாடுகளுக்குமிடையே அரசியல், பொருளாதார, கலாசார ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படும் எனத்தெரிகிறது.

## இந்துசமுத்திரம் மீது விண்வெளி தகவல் சேவை

லண்டன், ஜூன் 21

இந்துசமுத்திரம் மீதாக செய்மதி ஒன்றின் மூலம் கிழக்கையும், ஐரோப்பாவையும் தொடர்புபடுத்தும் புதிய விண்வெளி தகவல் சேவையொன்று விரைவில் ஆரம்பமாக இருக்கின்றது.

இந்த தகவல் சேவையை கொண்டியக்குவதற்கு 3 பிரமாண்டமான தகவல் ஈர்ப்பு நிலையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன. இந்த விண்வெளி தகவல்சேவை காலக்கிரமத்தில் சர்வதேச ரீதியில் விஸ்தரிக்கப்படலாமென லண்டன் வட்டாரங்கள் கூறின.

## ஸாம்பியாவில் பிரிட்டிஷ் மந்திரி

லுஸாக்கா, ஜூன் 21

பிரிட்டிஷ் காமன்வெல்த் விவகார ராஜாங்க மந்திரி திருமதி ஜூடித் ஹாட் இவ்வார இறுதியில் லுஸாக்கா வந்துசேர்ந்தார். ரொடீஷியப் புரட்சி ஆட்சியாளருக்கு எதிரான வர்த்தக முட்டுக்கட்டைகளைத் தீவிரப்படுத்துவது சம்பந்தமாக அவர் ஸாம்பிய அரசாங்கத்துடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்துவார்.

ஸாம்பிய காமன்வெல்த் விவகார ராஜாங்க மந்திரி திரு. மிவிங்கா மற்றும் ஸாம்பியஉயர்தர அரசாங்க அதிகாரிகள் அவரை லுஸாக்கா விமானநிலையத்தில் வைத்து வரவேற்றனர்.

## புருண்டியில் இருக்கிறார் கபாகா

லண்டன், ஜூன் 21

சென்ற மாதம் உகண்டா அரசாங்கம், புகண்டாவில் மன்னருக்கெதிராக எடுத்துக் கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து, தப்பிச் சென்ற கபாகா சர் எட்வர்ட் முடேசா இப்போது அண்டை நாடான புருண்டியில் அரசியல் அடைக்கலம் அளிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கபாகா மன்னர் காங்கோ வழியாக புருண்டிக்கு வந்தாராம்.

முதலில் அவர் லண்டனுக்குச் செல்லவிருந்தார் என்றும், ஆனல் பின்பு, புகாண்டா திரும்பும் நோக்கத்துடன் புருண்டியில் அடைக்கலம் கோரினர் என்றும் அறிவிக்கபபட்டது.

## "பூட்டோவுக்கு உடல் வியாதி இல்லை ஆனல் அரசியல் வியாதி"

### ராஜதந்திர வட்டாரங்கள் எதிரொலி

நியூயோர்க், ஜூன் 21

திரு. பூட்டோ நீண்ட ரஜாவில் செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு இங்குள்ள அமெரிக்க ராஜதந்திரிகள் அமைதியான வரவேற்பு தெரிவித்தனர்.

கடந்த சில வாரங்களாக எதிர்பார்க்கப்பட்ட விஷயமாதலால், ஆச்சரியம் எதையும் அவர்கள் வெளியிடவில்லை.

எனினும் இது ஒரு உற்சாகமளிக்கும் அபிவிருத்தி என்ற பொதுவான கருத்து ராஜதந்திர வட்டாரங்களில் நிலவுகிறது. சீனவிலிருந்து அப்பால் விலகி, மேற்கு நாடுகளுடன் நெருங்கும் சாத்தியம் இதில் இருப்பதாக அவர்கள் கருதுகின்றனர்.

பூட்டோவின் விலக்கத்தினல், பாகிஸ்தானுடனன சகல வித்தியாசங்களையும் பற்றிப் பேச்சு நடத்துமாறு இந்தியா நிர்ப்பந்திக்கப்படும் எனக் கருதப்படுகிறது.

காஷ்மீர் பிரச்னை தீர்க்கப்படும்வரை, அதுபற்றி பேச்சை இந்தியா நீடிக்க வேண்டும் என அமெரிக்கா வற்புறுத்துமெனத் தெரிகிறது.

திரு. பூட்டோ வைத்திய காரணங்களுக்காகச் செல்வதாகக் கூறப்பட்ட போதிலும் அவருக்கு சுகவீனம் எதுவும் இல்லை என்றும் அரசியல் சுகவீனமே இருக்கிறது என்றும் ராஜதந்திர வட்டாரங்கள் கூறின. உண்மையில் காதுவலி போன்ற சிறிய வியாதிகள் மட்டுமே அவருக்கு இருக்கின்றன.

பி டி ஐ

## பாகிஸ்தான் காஷ்மீரில் படை ஆயத்தமாம்

### இந்தியா கவலை

புதுடில்லி ஜூன் 21

பாகிஸ்தான்வசமுள்ள காஷ்மீரில் படை ஆயத்தங்கள் நடைபெற்றுவருவது குறித்து இந்திய வெளிமந்திரி சர்தார் சுவர்ணசிங் கவலை தெரிவித்திருக்கிறார்.

பாகிஸ்தானின் நோக்கங்களை பாரதம் அம்பலப்படுத்திவருவதுடன், எந்த விளைவுக்கும் தயாராகவும் இருந்துவருமென திரு. சிங் கூறினர்.

காஷ்மீரில் புதிய ஊடுருவல்கள் ஏற்படும் சாத்தியம் பற்றியும் அவர் குறிப்பிட்டார். இப்படி ஏற்படுமானல் அது டாஷ்கண்ட் ஒப்பந்தத்தை மீறுவதாய் இருக்கும் என்றும், இருநாடுகளுக்குமிடையேயான சகல வேற்றுமைகளையும் அமைதி வழியில் தீர்க்கவேண்டும் என்பதை பாகிஸ்தான் டாஷ்கண்ட் ஒப்பந்தத்தின்மூலம் ஒப்புக்கொண்டிருப்பதை அந்நாட்டுக்கு நினைவுபடுத்த விரும்புவதாகவும் அவர் கூறினர்.

எனினும் இந்தியா டாஷ்கண்ட் ஒப்பந்தத்தை தொடர்ந்து பின்பற்றும் என்றார் சுவர்ணசிங்.

பிரிட்டிஷ்

## மாலுமிகள் வேலைநிறுத்தத்துக்கு கம்யூனிஸ்டுகள் காரணம்?

### பிரதமர் வில்சன் அறிவிப்பு

லண்டன், ஜூன் 21

பிரிட்டனில் மாலுமிகளின் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடப்பதற்கு கம்யூனிஸ்டுகளே காரணம் என பிரதமர் வில்சன் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தைச் சீர் குலைக்கும் விஷயத்தில் சிறிய குழு ஒன்று நிர்ப்பந்தம் உபயோகித்து வருகிறது என்றார் வில்சன்.

அரசாங்கம் அவசியமானல் அவசரச்சட்டத்தை அமுல்நடத்தத் தயங்காது என்றும், கடும் போக்கை அரசாங்கம் கடைப்பிடிக்கும் என்றும் அவர் கூறினர்.

யூனியன் தலைவரை தம்முடன் பேச்சு நடத்த வருமாறு பிரதமர் அழைத்திருக்கிறார்.

வேலைநிறுத்தத்துக்கு கம்யூனிஸ்டுகள்தான் காரணம் என்ற பிரதமரின் குற்றச்சாட்டு பற்றி, கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக்காரியதரிசி குறிப்பிட்டபோது "இது ஒரு கற்பனை" என்றார்.

## அணுசக்தி ஒப்பந்தத்தில் பிரிட்டன் கைச்சாத்து

லண்டன், ஜூன் 21

சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸியுடன் பிரிட்டன் இன்று ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டது. இந்த உடன்பாட்டின் பிரகாரம் தென்கிழக்கு இங்கிலாந்தில் பிராட்வெல் என்னுமிடத்திலுள்ள பிரிட்டிஷ் அணுசக்திநிலையம் சர்வதேச பந்தோபஸ்து கட்டுக்கோப்புக்குக்கீழ் கொண்டுவரப்படும்.

பிரிட்டன் உடன்பட்டிருக்கும் இந்தப் புதிய திட்டம் சிவில் அணுசக்தி வசதிகளை சமாதான நோக்கங்களுக்காகப் பயன்படுத்த நிர்ப்பந்திக்கிறது. பிரான்ஸும் ரஷ்யாவும் இதுவரை இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை. ஆனல் அமெரிக்கா, ரோவி என்னுமிடத்திலுள்ள தனது அணுசக்தி நிலையத்தை இத்திட்டத்தின்கீழ் கொண்டுவந்திருக்கிறது.

## 'வியட்னம் யுத்தம் சரித்திரத்தில் குரூரமானது'

### தனது யோசனையை ஏற்குமாறு யு தாண்ட் விண்ணப்பம்

நியுயோர்க், ஜூன் 21

வியட்னமில், சரித்திரத்திலேயே குரூரமான போர் இடம் பெற்றிருப்பதாயும், இதை நிறுத்த தமது 3 அம்சத் திட்டத்தை ஏற்கவேண்டும் என்றும் ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் ஐ. நா. நிருபர்களிடம் கூறினர்.

வடவியட்னம் மீது குண்டு வீச்சு நிறுத்தப்படவேண்டும்

பிரச்னையில் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சு நடத்த சகல தரப்பினரிடையேயும் உடன்பாடு ஏற்படவேண்டும்.

ஜெனிவா அடிப்படையில் வியட்னம் பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டும்.

ஏற்கனவே தாம் தெரிவித்த மேற்கண்ட 3 அம்ச யோசனையை, யுதாண்ட் மீண்டும் வற்புறுத்தினர்.

வியட்னமில், நேற்று வியட்காங்கியருக்கு ஆயுதம் ஏற்றிச்சென்ற படகு ஒன்றை அமெரிக்கர்கள் கைப்பற்றினர்கள் அதே சமயம் வடவியட்னம் மீது தொடர்ந்து குண்டு வீச்சு நடைபெற்றது.

ஹூவே நகரில்

அரசாங்கத் துருப்புக்களால் முற்றுகையிடப்பட்டிருக்கும் 1500 பிக்குகளும் பெண்களும், குழந்தைகளும் தங்கள் உதவிக்கு வருமாறு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தைக் கேட்டிருக்கிறார்கள்.

## மைசூரில் 205 பேர் கைது

மைசூர், ஜூன் 21

ரயிலை நிறுத்த முயன்றதற்காக நேற்று மைசூரில் 205 பேர் கைதுசெய்யபபட்டனர். மைசூர்-மகாராஷ்டிரா எல்லைப்பிரச்னை சம்பந்தமான இயக்கத்தைத் தொடர்ந்து இச்சம்பவம் நடைபெற்றது.

## கேரளத்தில்

திருவனந்தபுரம், ஜூன் 21

நாளை கேரளத்தில் ஆசிரியர் வேலைநிறுத்தம் இடம் பெறவிருப்பதைமுன்னிட்டு, எல்லாப் பாடசாலைகளும் காலவரையின்றி மூடப்பட்டிருக்கின்றன.

## ரஷ்யாவுக்கு கனடா கோதுமை

ஒட்டாவா, ஜூன் 21

அடுத்த 3 ஆண்டுகளில் 80 கோடி டாலர் பெறுமதியான கோதுமையை கனடா, ரஷ்யாவுக்கு விற்கும் என அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உலகில் எல்லோரும் விரும்புவது அன்பையே. உலகில் அன்பில்லாத இடம், பொருள், வேலை எதுவுமில்லை. குடும்பத்தில் அன்பில்லாவிட்டால், அது வெறும் சுடுகாடாக மாறிவிடாதா?

—வினோபாஜி.

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

[illegible] பராபவ ஆண்டு ஆனி மீ 8 உ (22-6-66)

## பார்லிமெண்ட் கூட்டத்தொடர்

பார்லிமெண்டின் இப்போதைய கூட்டத்தொடர் இன்று கலைக்கப்பட்டுப் புதிய தொடர் இன்னும் சில தினங்களுக்குள் ஆரம்பமாகவிருக்கிறது.

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து பதினைந்து மாதங்களாகிவிட்டன. இந்த ஒன்றேகால் வருடத்துக்குள்ளும் அரசாங்கம் செய்த சாதனைகள் பற்றி ஒளிவு மறைவின்றி ஆராய வேண்டிய சமயம் இது.

இந்த நாட்டில் வாழும் சிறுபான்மைச் சமூகத்தவரின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்று தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டது. சிறுபான்மை இனத்தவர்கள் வைத்த நம்பிக்கைக்கு அரசாங்கம் துரோகம் செய்யவுமில்லை. ஆனால் அந்த நம்பிக்கையை இதுவரை பூரணமாக நிறைவேற்றவில்லை என்பதும் அதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை என்பதும் உண்மையே. இதற்கு இடையூறுகளும் இருக்கத்தான் செய்கின்றன

தமிழ்மொழி உபயோகச் சட்ட விதிகளை அரசாங்கம் கொண்டுவந்து நிறைவேற்றிவிட்டது. இந்த விதிகள் கொண்டுவரப்பட்ட பொழுது தமிழ் மொழி உபயோகச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்களுங்கூட எதிர்த்தனர். அந்த எதிர்ப்பு நடவக்கைகளின் விளைவாகப் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலநிலை இன்னும் அமுலிலிருக்கின்றது. இதுதவிரத் தமிழ்மொழிச் சட்ட விதிகளை அமுல்நடத்துவதற்கு அதிகார வர்க்கத்தினரின் இடையூறும் இருக்கின்றது. தமிழ்மொழிச்சட்ட விதிகள் தவிரத் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களுக்கும் மற்றும் தமிழ்பேசும் பொதுமக்களுக்கும் இருந்த கஷ்டங்களையும் ஓரளவாவது நீக்குவதற்குத் தேசிய அரசாங்கம் முயற்சிசெய்திருக்கிறதென்பதும்உண்மையே. இந்த முயற்சிகளுக்கு அதிகாரவர்க்கம் இடும் தடைகளை நீக்கி, சிறுபான்மையினரின் பூரண நம்பிக்கையைப் பெறவும், அதன் மூலம் நாட்டை முன்னேற்றவும் தேசிய அரசாங்கம் இனி வரும் ஆண்டுகளில் தீவிர முயற்சிசெய்யவேண்டும்.

வாழ்க்கைச் செலவைக் குறைப்பது தான் தேசிய அரசாங்கத்தின் முக்கிய கடமையும் பொறுப்பும் என்று அது ஆட்சிக்கு வந்தபொழுது கூறியது. இதற்கான முயற்சிகளையும் அது மேற்கொண்டதென்பதும் உண்மையே. ஆயினும் ஜவுளி விலைக்கட்டுப்பாட்டுத் திட்டமும், இதர நடவடிக்கைகளும் சரியானமுறையில் செயல்படவுமில்லை; எதிர்பார்த்தளவு வெற்றியளிக்கவுமில்லை. சரியான ஆலோசனையும், எண்ணித் துணியத் தவறியமையுமே இவற்றுக்கு முக்கிய காரணம். வாழ்க்கைச் செலவு உயர்வைக் குறைப்பதற்கு அரசாங்கம் எந்த நடவடிக்கைகளை எடுத்தாலும் பொதுமக்களின் ஆதரவு நிச்சயம் கிடைக்கும். ஆனால் இந்த நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு ஏமாற்றத்தை அளிக்காதவகையாகவும் உறுதியான திட்டத்தின்மீது மேற்கொள்ளப்படுபவையாகவும் இருக்கவேண்டும்.

பார்லிமெண்டின் இப்போதைய கூட்டத்தொடர் கலைக்கப்படும் இச்சமயத்தில் வேலைநிறுத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த வேலைநிறுத்தங்களில் பல, அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவையென்பது தெளிவாகிவிட்டது. இதை அரசாங்கமும்அறிந்துள்ளது ஆனால் வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர் அனைவரும் தங்களுக்குக் குறையெதுவுமின்றி அரசியல் நோக்கத்துக்காகவே வேலைநிறுத்தம் செய்கின்றனர் என்று அரசாங்கம் கருதினால் அதைவிடப் பெருந் தவறு இருக்க முடியாது. அதேபோல் தங்கள் கோரிக்கையும் வேலைநிறுத்தமும் நியாயமானதாக இருப்பினும் அதை அரசியலுக்குப் பயன்படுத்தப்படுவதைத் தொழிலாளர் சகித்துக் கொண்டிருப்பதும்தவறு.

இலங்கையின் அரசியல் அமைப்பைத் திருத்துவது பற்றி ஆராய்ந்து சிபார்சு செய்வதற்காக பார்லிமெண்டின் இருசபைகளினது அங்கத்தவர்களையும் கொண்ட தெரிவுக்குழு ஒன்றை நியமிப்பதற்கு இதற்கு முன்னும் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டன; தெரிவுக்குழு நியமிக்கப்பட்டும் இருக்கின்றன. ஆனால் பார்லிமெண்ட்கூட்டத்தொடர்கள் கலைக்கப்பட்டு அவை காலாவதியாகிவிட்டன. இதுதவிர காங்கேசன்துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியம் இந்தியாவின் சேதுசமுத்திரத்திட்டத்தினால் அதிகரித்துள்ளது. ஜவுளி விலைக்கட்டுப்பாட்டுத் திட்டத்தினால் சட்டத்தைத்திருத்த வேண்டியதும் அவசியமாகிவிட்டது. இதைத் தவிர சர்ச்சைக்குரிய மாவட்டசபை அமைப்பு, தமிழ்ப் பல்கலைக்கழக அமைப்பு ஆகியவைகளையும் அரசாங்கம் சமாளிக்க வேண்டியுள்ளது.

புதிய கூட்டத் தொடர் ஆரம்பமாகும் பொழுது இப்பெரிய விஷயங்களை அரசாங்கம் செய்யவேண்டிய நிலையிலுள்ளது. தேசிய அரசாங்கம் இவற்றைச் சாதிக்கமுடியுமென்றாலும் நாட்டின் நலனை முன்னிட்டு தேசியப்பிரச்னைகளில் தேசிய அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் அளிக்க வேண்டியது எதிர்க்கட்சிகளினதும் கடமையாகும். எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறுவதன் முன் அரசாங்கக்கட்சிக்குள் இருப்பவர்கள் தமக்குள் ஒற்றுமையை உருவாக்கிக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

# அம்மானை காட்டும் ஆனந்தம்

— ஆத்மநாதன் —

[நாளை (23-6-66) வியாழக்கிழமை மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூஜைத் தினம். இத்தினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.]

யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்பது உத்தமப் பெரியார் இயல்பு. மாணிக்கவாசக சுவாமிகளோ உலகப் பற்றின்றி வாழ்ந்து, உலப்பிலா ஆனந்தம் பெற்று, வழிகாட்டிய உத்தமர். அவர் இறைவனோடு பெற்ற அனுபவங்களான உவகையை, உள்ள நெகிழ்ச்சியை, பிரிந்தால் நேரும் அயர்ச்சியை, புணர்ந்தால் நேரும் பூரிப்பை, அருள்நெறியின் அருமையை, உயிர்களை இறைவன்பால் உளங்கொள்ள விடாது தடுக்கும் உலகியல் மாயத்தைப்பற்றியெல்லாம் பலவேறு துறைகளிற் பாடியுள்ளார்.

அம்மானை என்பது மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று. மாணிக்கவாசக சுவாமிகள் தமது சிவத்தல யாத்திரையில் அருணசலம் எனப்படும் திருவண்ணுமலையில் தங்கியிருக்குங்கால் புலரிப்போதில் நீராடப் புகும் மகளிர் தம்முள் பேசியதாகத் திருவெம்பாவை என்னுந் திருவாசகத்தைப் பாடிய பின்பு, அம்மானை விளையாட்டு அயரும் மகளிரை விளித்து, பரம்பொருளாம் இறைவனது பெருமைகளைப் பாடுவதனுல் எல்லையற்ற ஆனந்தக் களிப்பில் திளைக்கலாம் என அவர்களைத் தெருட்டியதாகப் பாடல்களின் இறுதிதோறும் ''பாடுதுங்காண் அம்மானுய்'' என்று திருவம்மானைத் திருவாசகத்தைப்பாடியருளினுர்.

மணிவாசகனுரது நினைவு கொள்ளும் தினத்திலே திருவாசகப் பாடல்களை வாயாரப் பயிலுவதே சாலச் சிறந்தது. அவ்வாறுபயிலுங்கால், அவற்றின் பொருளை ஓரளவுக்காவது உள்ளத்திற்கொண்டு ஓதுவதனுல் அவை எம் கருத்தில் நிலைக்கும். ஆகவே திருவம்மானை வாசகத்தின் சாரந்திரட்டி உளங்கொள்வோம்.

## அங்கருணை வார்கழல்

சிவந்த கண்களையுடைய திருமால் வராகவடிவெடுத்துப் பூமியைத் துளைத்துச் சென்றும் காணமுடியாத சிவபரம்பொருளின் மலர் போன்ற திருவடிகள் திருப்பெருந்துறையிலே குருந்தமர நிழலிலே வெளிப்படத் தோன்றின. அருள் நிரம்பிய கண்களோடு எம்பிரான் பரமாசாரியத் திருமூர்த்தமாக அங்கு எழுந்தருளி வந்து தரிசித்தவர்களின் பிறவிப் பிணியை நீக்குபவர், தரங்கெட்ட தமியேனையும் ஆட்கொண்டவர். அழகும் நன்மையும் கொண்டது திருப்பெருந்துறை. அங்குப் போருக்கு அழைப்பதுபோல ஆன்மாக்களைத் தம்பால் இழுத்து அவர்களுக்கு விடுதலை அளிப்பவர் அப்பெருமான். அவரது வீரக்கழலணிந்த, கருணை நிரம்பிய திருவடிகளைக் குறித்துப் பாடுங்கள்.

## பேராசை வாரியன்

மண்ணவர், விண்ணவர், பாதலத்தார், இவரல்லாத புறவிடத்தார் ஆகிய எவராலும் இன்ன தன்மையன், இவ்வணத்தன், இவ்வடிவத்தன் எனக்காண முடியாதவன் [illegible] எமக்கு எளிவந்தருளிய பெருமையுடையவன் திருப்பெருந்துறைப் பெருமான். தம்மிடத்தே இடையறா அன்பு செய்யும் பித்தத்தை எனக்காக்கி, இனிப் பிறவி வழி வராமல் தடுத்து என்னுள்ளம் புகுந்த ஆரா அமுதன். பரிபக்குவம் வாய்ந்த ஆன்மாக்களாகிய மீன்களைக் கவரும்படி அருள்வலை வீசிப்பற்றும் பெரிய அன்புக்கடல். மீனவனுகிய அப்பிரானுரைக் குறித்துப் பாடுவீர்களாக.

## அந்தமிலா ஆனந்தம்

இந்திரன், திருமால், பிரமன் முதலாம் எல்லாத் தேவர்களும் தவப்பயனுந் தேவருலகில் வாழ்கின்றனர் அவர் எவரையும் ஆட்கொள்ள விரும்பாத சிவபிரான். திருநீறு புனைந்த திருமேனிகொண்டு பரமாசாரியத் திருக்கோலத்துடன் தரங்கெட்ட தமியேனை அடிமை கொள்ள வேண்டிச் சிந்தையை உருக்கும்படி சிறப்புவாய்ந்த திருப்பெருந்துறையில் எழுந்தருளினுர். தரிசித்தவர்களின் பாசத்தளை அறுபடும் வண்ணம் அப்பிரானுர்வேதமாம் வெள்ளிய குதிரை மேற்கொண்ட திருத்தோற்றம் எல்லையில்லா இன்பப் பெருக்காகும். அதனைக் குறித்துப் பாடுங்கள்.

## ஆட்கொண்ட ஆண்டவன்

ஏ! தோழீ! ஒருவன் செய்த மாயத்தைச் செவியுற்ருயா? அழகிய மதில் சூழ்ந்த திருப்பெருந்துறையில் இருப்பவன் அவன். பிறர் எவரும் எனக்கே காட்டாத அருமையான உண்மைகளைக் காட்டிவிட்டான்.

அதுமாத்திரமா. சிவமாந்தன்மையைக் காட்டினுன்; திருவடித்தாமரைகளைக் காட்டினுன். சிவம் அருளும் கருணையாந்தேன் காட்டினுன். இவற்றையெல்லாம் கண்டதும் அவன்வசம் ஆயினேன். நாட்டிலுள்ளவர் என்னைக் கண்டு இது ஒரு (கடவுள்) பைத்தியம் என்று இகழ்ந்து சிரித்தனர். அதனுலென்ன? மேலான விடுதலையடையும்படி எம்மையாட்கொண்டான் பார்! அதனுல் அவ்வாறு ஆட்கொண்ட தன்மையைப் பாடுவோமாக.

## ஆயானை ஆள்வான்

இடையறாது நினைப்பவர் நெஞ்சில்நிலைத்து நிற்பவன்; நினையாதவருக்கு ஒரு போதும் எட்டாதவன்; செம்மை வாய்ந்தவன்; திருப்பெருந்துறையுடையவன்; ஞானமேவடிவானவன்; உலகநாயகியாம் அம்மையே பாதிவடிவன்; நாயாகுந் தமியேனைத் தாயாக வந்து ஆட்கொண்ட தலைவன்; உண்மைப் பொருளானவன்; ஏழுலகுந்தாமேயாகி ஆள்பவன் ஆகியபிரானைப் பாடுமாவோமாக.

## புண்சுமந்த பொன்மேனியன்

இசையோடுபாடும் பாடல்களை உவந்து ஏற்று அருள்புரிபவன்; அன்னைக்கு இடப்பாகம் அளித்தவன்; திருப்பெருந்துறையில் எழுந்தருளிய பரமாசாரியன், அகிலமும் பரவிய புகழுடையவன், அகன்ற பூமண்

(5-ம் பக்கம் பார்க்க)

## நாட்டிலும் நகரிலும்

இன்று இரவு இரண்டு மணிக்கு சூரிய பகவான் மிதுன ராசியைவிட்டு கர்ச்சகடக ராசிக்குள் பிரவேசிக்கிறுர். இப்படி நான் கூறுவதை நமதுதமிழ் சோதிடர்கள் ஆட்சேபிப்பார்கள் என்பது நிச்சயம். ஏனென்றல் எமது தமிழ் திகதி, பஞ்சாங்கங்களின்படிக்கு ஆடி மாத ஆரம்பத்தில் தான் சூரியன் கடகத்தில் வரும். இங்கிலீஷ் திகதியின் படிக்கும் அவர்களுடைய வான சாத்திரத்தின் படிக்கும் சூரியன் ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 22-ம் திகதி கடகராசிக்குள் புகுவார்.

அவர்களுடைய சோதிடமும் இந்த அடிப்படையிலேயே அமைந்திருக்கிறது. அதாவது ஜூன் 22க்கும் (ஆனி 8) ஜூலை 16-ம்திகதிக்கும் (ஆடி 1) இடையில் பிறக்கும் குழந்தையின் ஜாதகத்தில் அவர்களுடைய கணிப்பின்படி சூரியன் கடகத்தில் இருக்கும். எமது தமிழ்கணிப்பின்படிமிதுனத்திலேயேஇருக்கும். ஆங்கிலப் பத்திரிகைகளில் வரும் சோதிட பலாபலன்களைப் பார்ப்பவர்களுக்கு இந்த பெரும்வித்தியாசம் புரியாத மர்மமாயிருக்கும்.

வித்தியாசம் எப்படியிருப்பினும், சூரியன் கடகராசியில்பிரவேசிக்கும்காலத்தை தட்சணுயனஆரம்பம் என்று நாம் வழங்குகிறேம். தேவர்களுக்கு எமது ஒரு வருடம் ஒரு நாளாகுமாம். தட்சணுயனம் அவர்களுக்கு இரவின் ஆரம்பம். சூரியன் மகர ராசிக்குப் போகும்போது உத்தராயணம் ஆரம்பம். அதாவது தேவர்களின் பகல் வேளை தொடக்கம் சூரியன் தைமாதம் 1-ம் திகதி மகர ராசிக்குள் பிரவேசிப்பான். இங்கிலீஷ் கணிப்பின் பிரகாரம் சூரியனின் இந்த மாற்றம் டிசம்பர் 22-ம் திகதியே (மார்கழி 7) நிகழ்ந்துவிடும்.

பூமத்திய ரேகையிலிருந்து சூரியன் வடக்கே 23 1/2 பாகையும் தெற்கே 23 1/2 பாகையும் செல்வது போலத்தோன்றும். இந்த ரேகையில் வசிக்கும் ஜனங்களுக்கு சூரியன் இப்படி வடக்கும் தெற்கும் பிரயாணம் செய்வது அவ்வளவாகப் புலப்படாது. ஆனுல் பூமத்திய ரேகைக்கு மிகவும் வடக்கே வசிப்பவர்களுக்கு இது நன்ருகத்தெரியும். உதாரணமாக ஸ்வீடன், நோர்வே, வடக்கு ரஷ்யா, கனடா முதலிய நாடுகளில் வசிப்பவர்களுக்கு சூரிய வெளிச்சம் மிகக் குறைவாகவே கிடைக்கின்றது. நாளை முதல் சூரியன் மீண்டும் தெற்கு நோக்கிக் கிளம்பிவிடுவானுகையினுல் அவர்களுக்கு சூரிய வெளிச்சம் குறைந்து கொண்டே வந்து மார்கழி மாதக்கடைசியில் அவன் சில இடங்களில் துப்புரவாகவே மறைந்துவிடுவான். 24 மணி நேரமும் இருட்டாகவே இருக்கும்.

ஆதிகாலத்தில் ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் வசித்த மக்கள் சூரிய ஒளி குறையத்தொடங்கும் இந்த நாளை (ஜூன் 22) சந்தோஷத்துடன் வரவேற்றிருக்கமாட்டார்கள். பகல்நேரம் குறைந்து குறைந்து இரவு நேரம் கூடிக்கொண்டே போகும். ஆதலால்அவர்கள் நாடு முழுவதிலும் பெரிய நெருப்பு ஜ்வாலைகளை உண்டுபண்ணி சூரியனுக்கு கூடிய ஒளியைக் கொடுக்க முயலுவார்களாம்.

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நான் தமிழரசுக் கட்சியின் ஜென்ம விரோதி'

பதுளை, செவ்.

'இலங்கையிலுள்ள தமிழ் பிரஜைகளின் மனித உரிமைகளுக்காக நான் எனது அரசியல் தொடக்ககாலம் தொட்டு போராடி வந்திருக்கின்றேன். ஆனால் தமிழ் அரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் நான் அதன் விரோதி' என்று டாக்டர் என். எம். பெரேரா பதுளை சேனநாயகா பூங்காவில்நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

ஆரம்பத்தில் எந்த முறையில் நான் தமிழரசுக் கட்சியை எதிர்த்தேனே அதே முறையில் நான் தொடர்ந்தும் அக் கட்சியை எதிர்ப்பேன்.

சிறுபான்மை சமூகத்தவரான இலங்கை தமிழருக்கு தமிழரசுக் கட்சி சம உரிமை பெற எடுக்கும் நோக்கங்கள் நிறைவேறவிடாது நான் தடை செய்வேன்.

நாட்டில் இரு சமூகங்களுக்கிடையேயும தேசிய ஒற்றுமை நிலை நாட்டிவிட்டோம் என்று கூறும் ஐ. தே. கட்சி ஏன் வட மகாணத்திற்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதற்கு தயங்குகின்ற தென்பது புரியவில்லை'' என்றார்.

திரு. மைத்திரிபால சேனநாயகா உட்பட பலர் பேசினர்.

## 'நல்ல மொழிபெயர்ப்பு நூல்கள் தேவை'

யாழ்ப்பாணம், செவ்.

''மொழிபெயர்ப்பு நூல்களை அரசாங்கம் வெளியிடுவது வரவேற்கத்தக்கதேயெனினும், அவை மாணவர்க்குப் புரியும் வகையிலும் அமைவது மிகவும் அவசியமானது சுயமான முயற்சிகளின் தரக்குறைவை ஈடு செய்யக் கூடிய தரமான தமிழாக்கநூல்களேதேவை' இவ்வாறு, நெல்லியடி மத்திய கல்லூரி ஆசிரியர் திரு. வே. க நடராசா கரவெட்டி சேது நூலகத்தின் திறப்பு விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

''மொழி பெயர்க்கப்படும் நூல்களில் சில நூல்களே நல்ல தரத்தையடைவதில் பலவேறு துறைகளிலும் ஆற்றல் படைத்த அறிஞர்கள் சுலபமாக நூல்களை எழுதி வெளியிடவும் ஊக்குவிக்கப்படவேண்டும்'' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

''கலைச் சொல்லாக்கம் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேமாதிரியாக இல்லாது, வெவ்வேறு வகையில் நடைபெறுவதால், தமிழ் நூல்களை, ஏறக்குறைய ஒரே விஷயத்தைப் பற்றி இரண்டு நாடுகளிலும் தனித் தனியாக வெளியிட வேண்டியதாக இருக்கிறது. இதனால் இரட்டிப்புச் செலவு ஏற்படுகிறது. பலவித நூல்களை வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என திரு. தோமாஸ் ஈப்பன் கூறினார்.

தலைமைவகித்துப் பேசிய பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி இளைப்பாறிய விரிவுரையாளர் திரு. வே. கந்தப்பு நூலகத்தின் நோக்கங்களைப் பாராட்டி ஆசிகூறினார். திரு. க. சின்னத்தம்பி விழாவிற் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

## விசாரணை ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை, செவ்வாய்

நெல்லியடிக்கு அருகாமையில்உள்ள முடக்காடு என்னுமிடத்தைச் சேர்ந்த சின்னவன் மகன் கோவிந்தசாமி என்னும் (16 வயது) இளைஞனை அதே ஊரைச் சேர்ந்த மாணிக்கம் முருகேசு என்பவர் கழுத்திலிருந்து மார்பு வரை ஒரேவெட்டாக வெட்டிக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டி பருத்தித்துறை பொலிசாரால்தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிபதி திரு. பி. ஆர். சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது மா. இளையதம்பி, சி. ஆழ்வி, பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு பி இராஜேஸ்வரன், பொலிஸ்கான்ஸ்டபிள் திரு வீ அகமட் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு வி செல்லத்தம்பி ஆஜரானர் வழக்காளிதரப்பில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு பி இராஜேஸ்வரன் உதவியுடன் வழக்கறிஞர் திரு என் நடராசா ஆஜரானர்.

நீதிபதி விசாரணையைஇம் மாதம் 23-ந் திகதிவரை ஒத்திவைத்தார்.

## வவனியாவில் சேமிப்புவாரம்

### நிதிமந்திரி கலந்துகொள்வார்

வவனியா, செவ்.

வவனியா மாவட்டத்தில் நாளை நடைபெறவிருக்கும் சேமிப்பு வாரம் கொண்டாட்டம் வவனியாநகர சபை திறந்த வெளியரங்கில் நடைபெறும்.

நிதிமந்திரி திரு. யூ பி. வன்னிநாயக்கா விழாவை திறந்து வைப்பார் வவனியா அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. எம். பீ. பி. தசநாயக்கா தலைமையில் இவ்வைபவம் நடைபெறும்.

இவ்விழாவை முன்னிட்டு விசேடபஸ்சேவை வவனியா மாவட்டம் முழுவதற்கும் சேவைக்கு விடப்பட்டுள்ள தென்பது குறிப்பிடத்தக்கது.

## உற்சவம் ஆரம்பம்

நெல்லியடி, செவ்.

கரவைத் தச்சந்தோப்பு விநாயகர் ஆலய உற்சவம் இம் மாதம் 28-ம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள்வரைநடைபெறும்

உற்சவ நாட்களில் தொடர்ந்து அண்ணாமலைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு, அ. நடேசமுதலியாரின் சமயச் சொற்பொழிவுகள் பத்து நாட்களுக்கு மாலை 6-30 மணிக்கு இடம் பெறும்.

## இஸ்லாமிய திரைப்படங்கள்

பம்பலப்பிட்டி, செவ்.

இலங்கை இஸ்லாமிய கலைக்கழகக்குழு இஸ்லாமிய சமய, பண்பாட்டு, கலாச் சாரங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப் பட்ட திரைப்படங்களை நாடு பூராவும் திரையிடவிருக்கிறது.

## காசநோய் தடுப்பு இயக்கம்

ஊர்காவற்றுறை, செவ்.

புங்குடுதீவில் காசநோய் தடுப்பு இயக்கம் ஒன்றை ஆரம்பித்து நடத்துவதற்கான ஆலோசனை மகாநாடு ஒன்று சென்ற சனிக்கிழமை புங்குடுதீவு அரசினர் ஆஸ்பத்திரிக் கட்டடத்தில்நடைபெற்றது.

டாக்டர் செல்வரத்தினம், இந்தமகாநாட்டில் கலந்துகொண்டார். புங்குடுதீவு வைத்திய அதிகாரி காசநோய் தடுப்பு இயக்கம் பற்றி எடுத்துரைத்தார்.

வடமாகாணத்தில் புங்குடுதீவிலேதான் காசநோயாளர்கள் அதிகம் இருப்பதாக (சுமார் 160 பேர்) கூறப்படுகிறது.

கனடிய அரசாங்கம் இந்த நோயாளர்களின் நலத்திற்கு ரூபா ஐயாயிரம் நன்கொடை அளிக்க உடன்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

## அம்மானை . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டலத்தை ஆள்பவன்; நெற்றியிற் கண்படைத்த நிர்மலன்; மங்கல ஓசைமிகுந்த மதுரையிலே பிட்டுக்கூலி பெற்று மண்சுமந்தவன்; அம்மதுரை மன்னன் அரிமர்த்தன பாண்டியன் ஆணையால் பிரம்படிபட்டு உலகெலாம் உணரப் புண் சுமந்து ஒளிரும்பொன்மேனி அண்ணலைப் பாடுவோமாக.

### ஐயாறு அமர்ந்தான்

கைகளில் அணிந்த வளையல்கள் ஒலிசெய்யவும், காதணிகள் ஊசலாடவும், கருமைவாய்ந்த கூந்தல் புரளவும் மலர்களிலிருந்துதேன் பாயவும் வண்டுகள் ரீங்காரம் செய்யவும் அம்மானை ஆடும் மகளிர்காள்! செம்மேனி அப்பனை, வெண்ணீற்று ஒளியுடையானை, வணங்கவேண்டி ஒருபோதும் கைகூப்பியறியாதவனை, அகிலமும் நிறைந்திருப்பவனை, மெய்யன்பர்களுக்கு மெய்ப்பொருளாயுள்ளவனை, பொய்ப்பொலிவேடதாரிகளுக்குப் புலப்படாத மகாஞானியை; திருவையாற்றில் கோயில்கொண்டு குலவும் பிரானுரைப் பாடுவோமாக.

மெய்யன்பு கொள்ளாதபிறரால் அறியவொண்ணுதவன்; திருப்பெருந்துறையான்; வேதமாகும் வெற்றி வெண்குதிரையூர்ந்து. தன்னடியவர்களதுகுற்றம்நீக்கி, குணம் விரும்பிச் சீராட்டிப் பாசபந்ததொடர்பை அறுப்பவன்; அப்பிரானது பழமையான பெரும்புகழ்களை இடைவிடாது கூறி எம்மைப்பற்றிய மும்மலத் தொடர்பு அறும்படியாக நாம் அவ்விறைவனைப் பற்றும்பொருட்டு நாம் பிடித்துக்கொண்ட பேரானந்தத்தைப் பாடுவோமாக.

ஆசிரியருக்குக் கடிதம்

## சிற்பக்காட்சியில் தமிழ் ஒழிப்பு!

கடந்த 14ந் தேதி முதல் கலாபவனத்தில் நடைபெற்றுவந்த இலங்கைச் சிற்பப் பொருட்காட்சியில் ஒரு தமிழ்ச் சொல்லாவது இடம்பெறவில்லை. சகல அறிக்கைகளும் சிங்களத்திலும், ஆங்கிலத்திலுமே இடம்பெற்றுள்ளன.

இலங்கைக் கலைக்கழகத்தில் தமிழ்ப் பெரியார்கள் அங்கத்துவம் வகித்தாலும் கலைக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இச்சிற்பக் காட்சியில் தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ளமை தற்போதைய கலைக்கழகத்தில் தமிழர்கள் [illegible] வகிக்கவில்லை [illegible] உரிமையற்ற அங்கத்தவர்களாக இருக்கின்றார்களா என்னும் சந்தேகங்களை எழுப்புகின்றது.

சிற்பங்களைக் குறித்தும், அவற்றை உருவாக்கிய கலைஞர்களைப் பற்றியும் பரிசு பெற்றோர் பற்றியும் விபரங்களைக்கொண்ட அறிக்கை இதழும் சிங்களத்திலும், ஆங்கிலத்திலுமே அச்சிடப் பட்டுள்ளது.

115 சிற்பங்களுள் 11 சிற்பங்கள் சி. சத்தியநாதன், இ. விஸ்வலிங்கம் ஆகிய இரு தமிழர்களால் ஆக்கப் பட்டவையாகும். இதுபற்றிய விபரங்கள் தமிழில் எழுதப்படாது அறிக்கை [illegible] பட் [illegible]

சோதி

கொழும்பு.

## 'விவசாயமும், கைத்தொழிலும் அபிவிருத்தி அடையவேண்டும்'

வவனியா, செவ்.

''நாட்டின் உற்பத்தியை அதிகரிக்க வாலிபர்களுக்கு சிறுவயதுமுதல் விவசாயத்தில் சாதனை முறையிலும் போதனைமுறையிலும், பயிற்சி அளிப்பது அவசியம். நாட்டில் விவசாயமும், கைத்தொழிலும் அபிவிருத்தியடைந்துவிட்டால் வேலையில்லாத் திண்டாட்டமும் அறவே தீர்ந்துவிடும்''

இவ்வாறு நேற்று 7-ம் வாய்க்காலில் உள்ள வயலில் யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள் களைபிடுங்கு விழாவுக்கு தலைமைவகித்துப்பேசிய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

நாட்டில் உள்ள எல்லா நெல்வயல்களிலும் நல்ல முறையில் களைபிடுங்கினால் நமது நாட்டில் நெல்விளைச்சலை அதிகரிக்கலாம்; பிற நாட்டை எதிர்பார்க்க வேண்டிய அவசியமிருக்காது.

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திரு. சு. கனகரத்தினம் பேசும்போது கூறியதாவது.

மகாவலிகங்கையை இங்கு திருப்பினால் நமது அரிசித் தேவையில் 75 சத விகிதத்தை இம் மாவட்டத்தில் இருந்து தீர்க்கக்கூடிய வளம்உண்டு. நீர்வசதி இல்லாமல் எத்தனையோ ஏக்கர் வயல்கள் காய்ந்து வரட்சி மிஞ்சி விவசாயம் செய்யப்படாமல் இருப்பதைப் பார்க்கலாம். காரியாலய உதவியாளர் திரு. கந்தசாமி, பரந்தன் காரியாதிகாரி ஈ. புன்னநாயகம் உட்பட பலர் உரைநிகழ்த்தினர்.

## இறக்குமதித் தடையை தளர்த்த ஐ.தே.க. கிளை ஆலோசனை

கொழும்பு, செவ்வாய்

வெளிநாட்டுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டுமென்ற ஆலோசனையை ஐ தே க அங்கத்தவர்கள் ராஜாங்க மந்திரிக்கு ஒரு மகஜர்மூலம் தெரிவித்துள்ளார்சள்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: —

இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களை ஒரு திட்டமிட்ட அடிப்படையில் நிர்ணயித்தல்.

இறக்குமதி செய்யப்படும் பொருட்களை சரியானமுறையில் விநியோகம் செய்தல் மோசடி லஞ்ச ஊழல்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து நேர்மையற்ற முறையில் நடப்பவர்களைத் தண்டித்தல். ஜனப்பெருக்கத்தைக் குறைக்கவழிவகுத்தல்.

இன்னும் சில தினங்களுக்குள் இத்திட்டங்களை அரசாங்கம் ஆலோசனை செய்யுமெனத் தெரியவருகிறது,

## ஜெனரல் சுகர்ட்டோவின் நிர்வாகம் நீடிக்கும்?

### இந்தோனேஷிய மக்கள்காங்கிரசில்கோரிக்கை

ஜாகர்த்தா, ஜூன் 21

இந்தோனேஷிய மக்கள் ஆலோசனை காங்கிரஸ் கூட்டம் இன்று நடைபெற்றபோது ஜெனரல்சுகர்ட்டோவின் நிர்வாக அதிகாரத்தை அங்கீகரிக்குமாறு பிரதிநிதிகள் கோரினர்.

1945-ம் ஆண்டு அரசியல் சாஸனத்தை நிலைநாட்ட வேண்டும் என காங்கிரஸின் தற்காலிக தலைவர் கேட்டுக் கொண்டார்.

5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை அதிபர் தேர்தல் நடத்தவேண்டும் என பிரஸ்தாப அரசியல் சாஸனம் கூறுகிறது.

முன்பு உதவி அதிபராக இருந்த ஹட்டா ராஜினாமா செய்தபின் எவரும் உதவி ஜனாதிபதியாக நியமிக்கப்படவில்லை, இவ்விஷயம்பற்றியும், ஜனாதிபதி சுகர்ணேவின் ஆட்சி பற்றியும், பொதுத்தேர்தல்பற்றியும் சபையில் விவாதிக்கப்பட்டது.

இந்தோனேஷியாவில் கடந்த 1955-ல்தான் பொதுத் தேர்தல் நடைபெற்றதுஎன்பது குறிப்பிடத்தக்கது. நாளை தமது கொள்கை பற்றி ஜனாதிபதி சுகர்ணே விளக்குவார்.

## சாரணர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதுபற்றிநாம்எல்லோரும் கவலைப்படவேண்டியதாகும். இவ்விதம் கத்தி உபயோகிக்கும் தன்மை அடுத்தவர்களை மதிக்காத தன்மைக்கு உட்பட்டதாகும். இதனின்று வாலிபர்களை மீட்பதற்கு, அவர்களை உண்மையான சாரணர்களாக்குவதற்கு உரிய பயிற்சியளிக்க வேண்டும். அவ்விதம் சிறந்த சாரணர்களாக ஆக்கப்பட்டவர்கள் இந்நாட்டிற்கு மிக லாபகரமான முறையில் சேவைசெய்யக்கூடியவர்களாக இருப்பார்கள்.

யாழ் மாவட்ட சாரண இயக்க ஆணையாளர் திரு. ஜே. ஜி. அரசரத்தினம் பேசும்போது கூறியதாவது யாழ்ப்பாணத்திலுள்ள சாரணர்கள் சென்ற ஆண்டு, தொழில்செய்து ஊதியம் பெறும் மார்க்கத்தில் 20 ஆயிரம் ரூபா உழைத்தனர். இது ஏனைய மாவட்டங்களிலும், பார்க்க மிகக் கூடிய தொகை. கூடியபணம் சம்பாதித்த சாரணரின் அகில இலங்கைப் பரிசு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு கிடைத்தது.

மற்றும் பலரும் பேசினர்.

## அச்செழு கொலைவழக்கு

யாழ்ப்பாணம், புதன்

அச்செழு கொலைவழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ.சி. முன்னிலையில் விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்ட போது இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மரணவிசாரணையைநடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கத்தின் மரணத்தை உறுதிப்படுத்துவதற்காக ஜூலை மாதம் 13ந்திகதி வரை ஒத்திப்போடப்பட்டது.

இவ் வழக்கில் அச்செழுவைச்சேர்ந்த முத்துவேலு செபமாலையை, அவரதுகணவர் வைரமுத்துமுத்துவேலு கொலைசெய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. எதிரிக்காக புறக்டர் ஏ. அன்ரனி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார்.

அசைஸ் விசாரணை மீண்டும் 26ந் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை ஆரம்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலுக்கு அழகுதரும் 10 அம்சங்கள்

சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் நவின்ரேர்க்கினிமைநன்மொழிபுணர்தல் ஓசையுடைமை ஆழமுடைத்தாதல் முறையின் வைப்பே உலக மலையாமை விழுமியது பயத்தால் விளகுதார ணத்த தாகுதல் நூலிற் கழகெனும் பத்தே.

--நன்னூலாசிரியர்

# குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்க இயந்திரங்கள்

ஆசிரியர் வேலைக்குப் புதிதாகபோட்டி மூளைத்துள்ளது. குழந்தைகளுக்கு எழுதப் படிக்க கற்றுக்கொடுக்கும் வேலைக்கு எதிர்காலத்தில் இயந்திரங்கள் பயன்படுத்தப்படலாம். இதற்கான சோதனை ஏற்கெனவே மேற்குஜெர்மனியில் நடைபெற்று வருகிறது.

இந்த 'ஆசிரியர்' வேலையை மேற்கொள்ளவிருக்கும் இயந்திரங்கள் 'எலக்டிரானிக்' முறைப்படி இயக்கப்படும் 'எலக்டிரானிக்' இயந்திரங்களின் உதவியினல் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கும் திட்டம் தற்போது மேற்கு ஜெர்மனியில் கீஸ்ஸென் பல்கலைக்கழகத்தில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள ஆராய்ச்சி நிலையத்தில் சோதனை முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

விஞ்ஞானரீயில் திட்டமிட்டு கல்விபோதிக்கும் முறையில் கல்வி அறிஞர்கள் மட்டுமன்றி, மனேதத்துவ நிபுணர்களும், பொதுமக்களும் சமீப ஆண்டுகளாக மிகுந்த அங்கறைகொண்டு உழைத்துவருகின்றனர். குழந்தைகளுக்குஎழுதவும் படிக்கவும் கற்றுக்கொடுக்கவும் உலகிலேயே புதுமையான இயந்திரம் ஒன்றை ஆராய்ச்சி நிபுணர்கள் உருவாக்கியுள்ளார்கள். குறிப்பிட்ட சொற்களை படிக்க, உச்சரிக்க குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பதிலுள்ள சாதக பாதகங்களை அறியவும் இச்சோதனைத் திட்டத்தில் வழி செய்யப்பட்டிருக்கிறது. இயந்திரங்கள் மூலமே வெளிநாட்டு மொழிகளையும் படிப்படியாகச் சொல்லிக்கொடுக்க முடியுமா என்பதையும் விஞ்ஞானிகள் சோதனை செய்து வருகிருர்கள்.

## வான்வெளி ஆராய்ச்சியில் சிறைக் கைதிகள்!

வானவெளி ஆராய்ச்சிக்கு இப்போது சிறைக் கைதிகளும் பயன்படுத்தப் படுகிருர்கள்.

அமெரிக்காவிலுள்ளசிறைக்கைதிகள் தான் இவ்வித விஞ்ஞான முன்லேற்றத்தில் பங்கு கொள்கிருர்கள் அதாவது அமெரிக்க அரசாங்கம் இவர்களையும் பங்கு கொள்ளச் செய்கிறது. இதற்காக இவர்களுக்கு பணமும் கொடுக்கப்படுகிறது சிறைக் காலமும் குறைக்கப் படுகிறது.

இவர்கள் வானவெளியில் மனிதன் சஞ்சரிக்கும்போது எத்தவித மாறுதல்களுக்குள்ளாகின்றுன் என்பதனை இதற்கான ஆய்வு கூடத்தில் கண்டறிவதற்குப் பயன் படுத்தப்படுகிருர்கள்.

இதனுல் சிறைக் கைதிகளும் அரசாங்கமும் மிக்கபயனடையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## புகையும் நகையும்

'நான் புகை பிடிப்பதை நிறுத்திக்கொள்ள உத்தேசித்துள்ளேன். எனவேபெற்ருேல் நிரப்பும் நிலையத்தில் எனக்கு வேலை தேவை' பாரிஸ் பத்திரிகையில் ஒரு இளைஞர் இப்படி வேலைதேடி விளம்பரம் செய்திருந்தாராம்.

## நோய் குணப்படுத்தும் எலுமிச்சை

தாஜிகிஸ்தானில், வாகஷ்குடியரசில் கோதிம்பாகிரோவ் என்னும் 92 வயதுக் கிழவர் இருக்கிருர். அவர் அபூர்வ ரகமான எலுமிச்சை பயிர் செய்கிருர்.

இந்த எலுமிச்சைகளில் நோய் தீர்க்கும் சத்து அதிகமாக இருப்பதால் இதற்கு நல்ல கிராக்கி இருக்கிறது.

## நேரத்தின் கதை

இங்கிலாந்தில் 'கிறீன்விச்' நேரம் பல இடங்களிலும் நடைமுறைக்கு வருமுன்னர் குதிரை வண்டிகளில் செல்பவர்களுக்கு 'லண்டன் டைம்' என்ற கடிகாரத்தை ஒருபெட்டியினுள் வைத்து பூட்டிக்கொடுத்து விடுவார்களாம்! இவற்றை மாகாணங்களிலுள்ள நகர அதிகா-ரிகள் திறந்து பார்த்து பின் உள்ளூரிலுள்ள கடிகாரங்களைச் சரிபார்த்து விடுவார்களாம். இப்படி வளர்ந்தது தான் 'கிறீன்விச் மீன்டைம்'

# வெளியில் செல்ல கூச்சப்படும் பெண்கள்

## இது ஒரு வியாதியாம்

நம் நாட்டில் தான்வெளியேதனியச்செல்லப் பெண்கள் அஞ்சுகிருர்கள், ஆனல் மேல் நாடுகளிலெல்லாம் பெண்கள் எல்லோரும் வெளியே சென்று தமது அலுவல்களைக் கவனித்துக் கொள்கிருர்கள் என்று இங்கு சிலர் சொல்லக் கேட்கின்ருேம். ஆனல் அப்படியல்ல என்பது நாகரீகத்தில் முன்னேற்றமடைந்துள்ள பிரிட்டனிலிருந்து வெளியாகும் செய்தியொன்றிலிருந்து தெரியவருகிறது. (4-ம் கலம் பார்க்க)

## சூரியனின் சக்தி

சூரியன் 10 ஆயிரம் கோடி நட்சத்திரங்களுக்குசமானம். சில தினங்களுக்குள்சூரியன்உலகிலுள்ள எண்ணை அத்தனையையும் கரி எல்லாவற்றையும் காடுகளிலுள்ள மரங்கள் அனைத்தையும்எரித்துசாம்பலாக்கக்கூடிய உஷ்ண சக்தியை வெளிப்படுத்துகிறது. ஆனல் உலகுக்கு 100 கோடியில் ஒரு பங்குக்கும் குறைவான வெப்பமே கிடைக்கிறது. இதனுல்தான் உலகம் தப்பி நிற்கிறது.

சூரியன் இவ்வளவு பிரகாசமாக இருப்பதற்கு காரணம் அணு சக்தி தான்.

விஞ்ஞானி ஹெபேர்ட் பிரைட்மான் தெரிவிக்கும்தகவல் இது.

# ஜாக்கி மறு மணம்

## ஆதாரமற்ற வதந்திகள்

கொலையுண்ட அமெரிக்க ஜனுதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின்ஸ்பானிஷ் ராஜியதூதுவர்ஒருவரைமறுமணம் செய்து கொள்வார் என வெளிவந்த செய்தியில் உண்மைஎதுவும் இல்லை இது ஆதாரமற்ற வதந்தியென திருமதி கென்னடியின் நெருங்கிய உறவினர்ஒருவர் தெரிவித்துள்ளார்.

சேகரிப்பு: கணேஷ்

## தாடியால்ஓவியம்

ஓவியத்தில் எத்தனையோ வகையுண்டு ஆனல் ஓவியர் எல்லோரும் கையால்தான் தூரிகை கொண்டு வரைகிருர்கள். ஆனல் இதில் ஒரு திருப்பம் செய் திருக்கிருர் தலைகீழாக ஓவியம் வரையும் பாட்போல்சன் என்ற அமெரிக்கர். இவர் தூரிகையாகப் பாவிப்பது தமது தாடியைத் தான் முகம் தலை இவற்றைக் கூடஇவர் சித்திரம் வரைய உபயோகிக்கிருராம். சித்திரமும் கைப்பழக்கம் என்பதை மாற்றி சித்திரமும் முகப் பழக்கம் என்ற வழக்கத்தை ஏற்படுத்தியிருக்கிருர் இவர்.

# பாம்பின் கால்

பாம்பின் கால் பாம்பு அறியும் என்றொரு பழமொழி உண்டல்லவா. இதை இப்போது அண்மை என்று அறிந்துள்ளார்கள் ஆராய்ச்சியாளர்கள். சில பெரிய ஜாதிப்பாம்புகளுக்கு கால்கள் உண்டு என்று இந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். [illegible] கால்கள் போதிய வளர்ச்சியடையாததால் [illegible] நமக்குத் தெரிவதில்லையாம்.

# என்ன நடக்கிறது

## மரக்கறி சாப்பாடு ஆனல். . .

கனடாவைச் சேர்ந்தபியரிவல் என்பவர் 8 கசாப்புக் கடைகளை நடத்துகிருர், ஆனல் இவர் புலால் புசிப்பதில்லை. இவரது குடும்பத்தினரும் புலால் அருந்துவதில்லை.

## அலுமினியத்துக்கு இப்படியும் பெயர்

ஸ்பெயினில் அலுமினியத்தை 'அலுமினியோ' என்று அழைக்கிருர்கள்.

## தாய்மொழி

தாய்மொழியைத் திறமையாகப் பயன்படுத்தத் தெரியாதவன் எவனும் வேறு மொழியைத் திறமையாகப் பயன் படுத்தக்கற்றுக் கொள்ள முடியாது.

— பெர்னுட்ஷா

## குருஷ்சேவ் மெலிந்துவிட்டார்

முன்னைநாள் ரஷ்யப் பிரதமர் திரு. நிக்கிதா குருஷ்சேவ் மிகவும் மெலிந்துவிட்டதாகவும் மிகவும் களைப்படைந்தவர் போல் காணப்படுவதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது இவருக்கு இப்போது வயது 72.

## சேலை உடுப்பவர்கள் மூளைசாலிகள்!

'சேலை உடுப்பவர்கள் மூளை சாலிகள்' என ஆங்கில மாது ஒருவர் துணிந்து கூறியிருக்கிருர்.

அனேனுவின் என்ற இந்த ஆங்கில மாது இது பற்றி மேலும் தெரிவித்திருப்பதாவது:

ஆசிய நாட்டுப் பெண்கள் எங்களை (விட மேல நாட்டுப் பெண்களை விட) மூளைசாலிகள். அவர்கள் எம்மை விட முன்னேறிவிடுகிருர்கள், சேலை கட்டிக்கொள்வதால் தான்இந்த முன்னேற்றம் என நான் நினைக்கிறேன்.

அங்கும் இங்கும் துணிகளை வெட்டி நாம் உடை தயாரிப்பதை விட சேலை கட்டிக்கொள்வது அழகாக இருக்கும் என்றுதான் நான் கருதுகிறேன்.

நெற்றியில் திலகம் இட்டுக் கொள்வதும் மிக அலங்காரமாக இருக்கிறது என அனேனுஅபிப்பிராயம் தெரிவித்துள்ளார்

தாம் சேலை கட்டிக் கொள்ளவே விரும்புவதாகவும் இவர் லண்டனிலிருந்து வெளியாகும் பத்திரிகை யொன்றுக்களித்த பேட்டியின் போது தெரிவித்துள்ளார்.

## வெளியில் . . .

(2-ம் கலத் தொடர்ச்சி)

பிரிட்டனில் சுமார் ஒரு லட்சம் பேர் தனியாக வெளியில்செல்லஅஞ்சுகிருர்களாம். இப்படி கூச்சப்படுபவர்களில் அதிகமானேர் பெண்கள் என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பெண்கள் கடைக்குப்போய் தமக்குத் தேவையான சில அத்தியாவசிய பொருள்களைக் கூட வாங்குவதற்கு கூச்சப்படுகிருர்களாம். இன்னும் சிலர் வாசலுக்கு வர வேபயப் படுகின்ருர்களாம்.

இதுபற்றி ஆராய்ந்த மன நோய்வைத்தியர்கள், இவர்கள் 'அகோரபோபியா' என்ற நோயினுல் பீடிக்கப்பட்டிருக்கிருர்கள் என்று கண்டு பிடித்துள்ளார்கள். இந்த நோய்தான் இவர்களை இப்படி அஞ்சப்பண்ணுகிறதாம்

இவர்களுக்கு தகுந்த சிகிச்சையளிக்க இப்போது துரித ஏற்பாடுகள் செய்யப் பட்டுவருகிறது.

## பூரி ஜகந்நாதர்

பூரி, ஜூன் 21

நேற்று பெருமழை இருந்தும் கூட பூரி 'ரத யாத்ரா' வை 1 லட்சம் பக்தர்கள் கண்ணுற்றனர்.

ஜகந்நாதர், பாலபத்திரர், சுபத்ரா ஆகிய தெய்வங்களைக்கொண்ட தேர் உற்சவம்பிற்பகல் 3ம்ணிக்கு இடம் பெற்றது.

## சுகாதாரவிழா

ஊர்காவற்றுறை செவ்.

நயினுதீவில் சுகாதார விழா தீவுப்பகுதிக்காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிச் தலைமையில் நடைபெற்றது.

நயினுதீவு நாகபூஷணிவித்தியாசாலை, கணேசவித்தியாசாலை; மாணவர்கள்மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சுகாதாரக் கதம்ப நிகழ்ச்சிகளில் பங்குபற்றினர்கள். தேகாரோக்கியக் குழந்தைகள் போட்டியும் நடைபெற்றது.

திரு. ஏ. செல்லையா உரை நிகழ்த்துகையில் தளர்ந்து வரும் பொருளாதாரம், இழந்து வரும்வேலைவாய்ப்புக்கள், பெருகிவரும் ஜனத்தொகை, நெருங்கிவரும் வீட்டுப்பிரச்சினைகள் பற்றி மக்கள் சிந்தித்துச் செயலாற்றவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இவ் விழாவில் திரு இராஜகுலசேகரம் திரு. த. திருநாவுக்கரசு, நயினுதீவு வைத்தியநிலைய பொறுப்பதிகாரி, திரு. எஸ். குகதாசன் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

விழாமுடிவில்தீவுப்பகுதிக் காரியாதிகாரியால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்முகப் பரீட்சையில் தோற்ற இளைஞன் சுருக்கிட்டு தற்கொலை!

இமையாணன். திங், நேர்முகப்பரீட்சை ஒன்றில் தோல்வியுற்றதன் காரணமாக இளைஞர் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலைபுரிந்தசம்பவம் பொலிகண்டியில் உள்ள கெற்ருவற்றையில் நடைபெற்றது. முருகேசுவின் இளைய மகஞன சிவபாத சுந்தரம் என்னும் பதினறு வயதுடைய இளைஞன் மாடு கட்டும் கயிற்ருல் கழுத்தில் சுருக்கிட்டுத் தொங்கிக் கொண்டிருக்கையில், இதைக் கண்டவர்கள் அவரைக் காப்பாற்ற எடுத்துக்கொண்ட முயற்சிகள் பயனளிக்காமல்போய் விட்டன.

பருத்தித்துறை காட்லிக் கல்லூரியில் பல்கலைக்கழகப் புகுமுகவகுப்பில் கல்வி பயின்ற இந்த இளைஞன் கடிதம் ஒன்றையும் எழுதி வைத்திருந்தார்.

நான் தற்கொலை புரிந்ததை வெளியில் காட்டிக் கொள்ள வேண்டாம். பொலிசுக்கோ, விதானைக்கோ அறிவிக்கவேண்டாம். என்று தனது கடிதத்தில் எழுதியுள்ளார்.

இவர் நேர்முகப்பரீட்சைக்குச்சென்று திரும்புகையில் அங்கு சந்தித்த தனது இரு சகோதரர்களிடம்: "அவசரமாகச் சனிக்கிழமை வீட்டிற்கு வரவேண்டும் என்று அவர்களைக் கேட்டு விட்டு வீடு திரும்பினராம்.

கிராமசேவையாளரும். பொலிஸ்அதிகாரியும் ஸ்தலத்திற்குச்சென்று விசாரணை நடத்தினர்.

மரணவிசாரணை அதிகாரி விசாரணை நடத்தினர். தற்கொலைஎனத் தீர்ப்பளிக்கப் பட்டது.

## சந்தேகத்தின்பேரில் கைது

யாழ்ப்பாணம், புதன் கஸ்தூரியார் வீதியிலுள்ள மதுபான விற்பனை நிலையத்தில் திருட்டுப்போனது சம்பந்தமாக ஆனைக்கோட்டையை சேர்ந்த சண்முகம், நயினாதீவைச்சேர்ந்த ஸ்வலிங்கம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நடராசா ஆகியோர் சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அரசாங்க ரசாயன பரிசோதகர் அடையாளங்களை பரிசீலனைசெய்து வருகிறார். இன்ஸ்பெக்டர் எம். ஆர். சௌந்தரநாயகம் தொடர்ந்து புலன்விசாரணைசெய்து வருகிறார். (ந. நி)

## பிரதமருக்குப் புதிய திட்டம்

கண்டி, செவ்வாய் 50,000 இளைஞர்கள் எவ்வாறு விவசாயத்தில் ஈடுபட்டு நாட்டின் அபிவிருத்திக்கு உதவலாமென்ற உருப்படியான திட்டம் ஒன்றைக் கண்டியிலுள்ள தோட்ட முதலாளி ஒருவர் பிரதமர் டட்லி சேனநாயக்காவிடம் சமர்ப்பித்துள்ளார்,

# மஞ்சள் இல்லத்துக்கு முதலிடம்

சுழிபுரம், செவ்வாய் "ஒருவன் தனது கல்வியை பாடசாலை கட்டிடங்களிலிருந்து பெறுவதிலும் பார்க்க விளையாட்டு மைதானத்திலிருந்து அதிகம் கற்றுக்கொள்ளலாம். நான்கு சுவர்களுக்கு மத்தியில் இருந்து புத்தகப் பூச்சியாக வாழ்ந்த ஒருவன், வெளியேவந்து எல்லாத்துறைகளிலும் பின்தங்கியவனுகவே வாழ்கின்ருன். விளையாட்டுத்துறையில் ஈடுபட்ட மாணவர்கள் நல்ல பிரஜைகளாகவும் திடகாத்திர வீரர்களாகவும் வாழ்கின்ருர்கள்." என்று சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப்போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண பொலிஸ் அதிபர் திரு. ரி. தளையசிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. வி. தம்பு பரிசளிப்பு வைபவத்துக்கு தலைமை வகித்தார்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திரு. ரி. தளையசிங்கம் பரிசில்களை வழங்கினர். இல்லங்களின் போட்டிமுடிவு வருமாறு: மஞ்சள் இல்லம்; 360 புள்ளிகள், நீலஇல்லம்: 271 புள்ளிகள், சிவப்பு இல்லம்: 260 புள்ளிகள், பச்சை இல்லம்: 232 புள்ளிகள்.

சிலமுக்கிய போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

100 மீட்டர்— ஓட்டம் மேற்பிரிவு (ஆண்): வி திருநாவுக்கரசு, ரி. முருகேசம்பிள்ளை, கே. பாலசிங்கம்.

100 மீற்றர் ஓட்டம்— மேற்பிரிவு (பெண்): எஸ். சிவயோகநாயகி, பி. சித்திராவதி, கே சந்திரா னி.

1500 மீற்றர் ஓட்டம்— (ஆண்கள்): எ. பத்மநாதன், ஆர். கனகசபை, எஸ் குணநாயகம்.

பழைய மாணவர் ஓட்டம்: எம். தவராசா, இ. கிருஷ்ணதுரை, கே. சிவநாயகம்.

## இளைஞர் கழகம் சாம்பியனானது

வல்வெட்டித்துறை, செவ். வல்வை விளையாட்டுச் சங்கத்தினரால் வருடா வருடம் நடாத்தப்படும் கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி வல்வை புளூஸ் விளையாட்டு மைதானத்தில் நெடுந்தீவுக் காரியாதிகாரி திரு. மா. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

விளையாட்டுப் போட்டிகள் மூலம் மக்களிடையே குறிப்பாக வாலிபர்கட்கிடையில் சகிப்புத் தன்மை சமரச மானப்பான்மை ஆகியன வளர்வதோடு வாழ்வில் முன்னேற்றத்திற்கான எண்ணங்களும் விரிவடைவதாகவும் தலைவர் பேசுகையில் கூறினர்.

மேற்படி போட்டியில் திருவில் இளைஞர் விளையாட்டுக் கழகம், உதய சூரியன் கழகம், ரேவடி ஐக்கிய இளைஞர் விளையாட்டுக கழகம், றெயின் போஸ்கழகம், சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகியன கலந்து கொண்டன. போட்டி முடிவில் ரேவடி ஐக்கிய இளைஞர் விளையாட்டுக் கழகம் 138 புள்ளிகளைப் பெற்று இவ்வருட சாம்பியனாகத்தெரிவு செய்யப்பட்டது.



## இசை அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், புதன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நான்கு ஆண்டுகள் இசைபயின்று இசைத் தேர்வில் முதலிடம் பெற்ற சங்கீத பூஷணம் செல்வன் பொன்னம்பலம் சுந்தரலிங்கத்தின் இசை அரங்கேற்றம் இம்மாதம் 24-ந்திகதி வெள்ளிக்கிழமை மாலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். விழாவிற்குத் நீதியரசர் கலாநிதி எச். டபிள்யு. தம்பையா கியு. சி. தலைமை வகிப்பார்

## பழைய பஸ்கள்

பம்பலப்பிட்டி, செவ. வெரகர மத்திய பஸ் நிலையத்தில் நேற்றுப் பழுதடைந்த 40 பஸ்கள் ஏலத்தில் 225,000 ரூபாவுக்கு விற்கப்பட்டது,

## திருட்டு வழக்கில் தீர்ப்பு

மாவிட்டபுரம், திங். உடுவில் ஆலடியைச் சேர்ந்த ஆறுமுகம் கல்யாணசுந்தரம் என்பவருடைய வீட்டில் சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் 21 ம் திகதி சுன்னுகத்தைச் சேர்ந்த இளையதம்பி இராசையா என்பவர் களவெடுக்கும் நோக்குடன் வீட்டைத் தகர்க்கவும், 250 ரூபாய் பெறுமதியான துணிவகைகளையும் இரண்டு "எவர் சில்வர்" பாத்திரங்களையும் திருடியதாகவும், சட்டவிரோதமாக வீட்டிற்குள் பிரவேசித்ததாகவும் குற்றம் சாட்டி சுன்னுகம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச் அத்துருபானு முதல் இரண்டு குற்றச் சாட்டுகளிலும்எதிரியை குற்றவாளியாகக் கண்டு மூன்ரும் குற்றச் சாட்டில் எதிரியை விடுதலை செய்தார்.

முதல் குற்றச் சாட்டிற்கு ஒரு வருடக் கடூழியச் சிறையும் 100 ரூபா அபராதமும் விதித்தார். அபராதம் செலுத்தத் தவறினல் 3 மாதச் சிறைத் தண்டனை அனுபவிக்கும் படியும் உத்தரவிட்டரே்.

இரண்டாம் குற்றச் சாட்டிற்கும் ஒருவருடச் சிறைத் தண்டனையும் விதித்து தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்கும் படியும் உத்தரவிட்டார்.

எதிரிதரப்பினர் தண்டனையை எதிர்த்து அப்பில் செய்யப் போவதாக அறிவிக்கவே நீதிபதி எதிரியை 750 ரூபாய் பிணையில் செல்ல அனுமதியளித்தார். எதிரி தரப்பினர் தண்டனையை ஆட்சேபித்து அப்பில் செய்துள்ளனர்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானர். சுன்னுகம் பொலிசாரின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. ரி. தம்பிரத்தினம் வழக்கை நடத்தினர்.




# சுமித்தியன்

## காய்கறிப் பீடைகளை ஒழிக்கும் சர்வ கிருமி நாசினி

கிருமிகளை நாசம் செய்வதும் அதே சமயம் மனித பாவனைக்குப் பாதுகாப்பானதும் என்று முற்றிலும் நிரூபிக்கப்பட்ட கிருமி நாசினி இதோ வந்திருக்கிறது. கோஸ் கீரைவகைகள, பூசினி, புடோல் போன்ற காய் ரகங்கள், மிளகாய் மற்றும் காய்கறிகளையும், வெங்காயம், புகையிலை, உருளைக்கிழங்கு, நிலக் கடலை, சிட்ரஸ், முதலாம் எலுமிச்சை ரகங்கள், மா, அன்னுசி போன்ற பழ விருட்சங்கள், அலங்காரச் செடி கொடிகள் ஆகியவற்றையும், அரித்தும் சாரம் உறிஞ்சியும் பாதிக்கும் சகல பீடைகளையும் ஒழித்துக் கட்ட சுமித்தியன் சிபாரிசு செய்யப்படுகிறது.

சுமித்தியன் உபயோகியுங்கள்-அது பாதுகாப்பானது, செயலவன்மை வாய்ந்தது.

ஷெல் ரசாயனப் பொருட்கள் SHELL

ரசாயனப் பொருள் என்றதும் நினைவில் வருவது ஷெல்.

'அல்றெக்ஸ்,' 'டீல்றெக்ஸ் 20,' 'டீல் றெக்ஸ் எக்ஸ்ட்ரா,' 'என்றெக்ஸ் 20,' 'ஆர்கொடீன்,' 'பொஸ்றின்,' 'பிட்றின்,' 'மலதியன்,' ஷெல் களைப்புற்கொல்லி எம் 50, ஷெல் களைப்புற்கொல்லி ஆர் 25, 'கிறமவின்,' ஷெல் பீ. எச். சி. 10% தூள். இவை ஷெல் ஸ்தாபனத்தாரின் விரிவான விவசாய ரசாயனப் பொருள்களில் சில மாத்திரமே.

GRANTS 2602


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரிக்கெட் டெஸ்ட்: மேற்கிந்திய - 5: 288

# ஸோபர்ஸ் 121; ஹால்போர்ட்: 71 ஓட்டங்கள்

### லாட்ஸ் டெஸ்ட் இன்று வெற்றி தோல்வியின்றி முடிவடையும்

- ''அவதானி' -

லாட்ஸ், ஜூன் 21

இங்கிலாந்துக்கும் மேற்கிந்தியாவுக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்டின் நான்காவது நாளான இன்று மேற்கிந்தியா; ஸோபர்ஸினதும் ஹால்போர்ட்டினதும் பேருதவியுடன் தனது நிலையை ஓரளவு காப்பாற்றிக்கொண்டது. ஸோபர்ஸ் 121 ஓட்டங்களை வெற்றிகரமாகப் பெற்றுள்ளார். மேற்கிந்திய ஸகோர் 5 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 288 ஓட்டங்கள்.

காலையில் மோசமான நிலையில் காணப்பட்ட மேற்கிந்தியா, ஸோபர்ஸினதும் ஹால்போர்ட்டினதும் சிறப்பான விளையாட்டினால் இன்று இறுதி நேரத்தில் எதிர்பாராத முறையில் விறுவிறு என்று ஓட்டங்களை எடுத்தது. 95 ஓட்டங்களில் ஐவரை இழந்த இக்கோஷ்டி ஸோபர்ஸ், ஹால்போர்ட்டின் சிறப்பான ஆட்டத்தினால் 193 ஓட்டங்களை மேலதிகமாகப் பெற்றுக்கொண்டது. இன்று ஸோபர்ஸ் 121 ஓட்டங்கள் எடுத்தார். ஹால்போர்ட் 71 ஓட்டங்கள் எடுத்தார். இவர்களிருவரும் நாளை (கடைசி நாள்) தொடர்ந்து விளையாடுவார்கள்.

இந்த நெருக்கடியான கட்டத்தில் இங்கிலாந்து வெற்றி பெறுமாஎன்ற நிலைமாறி, இக்கிரிக்கெட் டெஸ்ட் வெற்றி - தோல்வியின்றி முடிவடையும் என்ற எதிர்பாராத முடிவு இப்பொழுது தோன்றிவிட்டது!

#### காலையில்....

இன்று காலையில் மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டி தனது இரண்டாம் இன்னிங்ஸை தொடர்ந்து ஆடியதும் கட, கடவென்று விக்கட்டுகள் விழத் தொடங்கிவிட்டது. மேற்கிந்திய கோஷ்டிக்கு இதுபெரும் சோதனையாகவே அமைந்துவிட்டது.

பதினெட்டு ஓட்டங்களுடன் இன்று காலை தனது இரண்டாம் இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியா, நண்பகல் இடைவேளைக்குள் மேலும் நான்கு விக்கட்டுகளைப் பறி கொடுத்துவிட்டது! மூன்றுவது நாளில் இரண்டாவது ஓட்டத்தில் முதல் விக்கட்டை இழந்த மேற்கிந்தியா, இன்று இருபத்தியிரண்டாவது ஓட்டத்தில் 2-வது விக்கட்டையும் 26-வது ஓட்டத்தில் 3-வது விக்கட்டையும் 91-வது ஓட்டத்தில் 4-வது விக்கட்டையும் 95-வது ஓட்டத்தில் 5-வது விக்கட்டையும் இழந்தது. நண்பகல் இடைவேளை வரை மேற்கிந்தியா ஐந்து விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 122 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

#### ஸ்கோர் விபரம்

நண்பகல் இடைவேளை வரையிலான ஸ்கோர் விபரம்:

கறு — 00
ஹண்ட் — 13
கன்ஹாய் — 40
புச்சர் — 03
நேர்ஸ் — 35

நண்பகல் இடைவேளைக்கு சில நிமிடங்களுக்கு முன்னர் ஹால்போர்ட்டும், ஸோபர்ஸும் (காப்டன்) ''ஜோடி'' சேர்ந்து விளையாடிக்கொண்டிருந்தனர். இவர்கள் இருவரும் நண்பகல் இடைவேளையின் போது முறையே 10-ம், 21 ஓட்டங்களும் எடுத்திருந்தனர். ஆனால் இடைவேளைக்குப் பின்னர் ஆட்டம் ஆரம்பித்ததும் இவர்களிருவரும் விளாசத் தொடங்கிவிட்டனர்.

இன்று நடைபெற்ற கிரிக்கெட் போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமைந்திருந்தது. இங்கிலாந்து கோஷ்டியினரின் விளையாட்டு இன்று முதல்தரமாகக் காணப்பட்டது. இவர்களது 'பீல்டிங்' உச்சத்தை அடைந்திருந்தது. ''விக்கட் கீப்பர்'' பாக்ஸ் இன்று காலையில் அற்புதமான முறையில் இரண்டு பந்துகளைப் பிடித்து இருவரை ஆட்டமிழக்கச் செய்திருந்தார். பந்தெறி வீரர்கள் ஹிக்ஸ், ஒலிவேரா, நைட் ஆகியோர் திறமையாக விளையாடியது குறிப்பிடத்தக்கது. ஹிக்ஸ் 2, ஒலிவேரா 1, நைட் — 2 விக்கட்டுகளை வீழ்த்தியுள்ளனர்.

---

# மூன்றுவது மொழியின் பாரத்தை தாங்கமுடியாது

### செனட்டில் மந்திரி திருச்செல்வம்

கொழும்பு, திங்கள்

நாடு முழுவதிலுமுள்ள எல்லாப் பாடசாலைகளிலும் சிங்களத்தைக் கட்டாயப் பாடமாக்கவேண்டும் என்று எதிர்க்கட்சியினர் செனட் சபையில் சமர்ப்பித்துள்ள பிரேரணை மீதான விவாதம் இன்று மீண்டும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் ஒத்திவைக்கப்பட்ட தமது கடந்த வார பேச்சை மீண்டும் ஆரம்பித்தார்.

நாட்டில் 2 தேசிய மொழிகள் இருக்கின்றன. தாய் மொழியில் கல்வி போதனை நடைபெறவேண்டியது அவசியம். விஞ்ஞானம் போன்ற முக்கிய பாடங்களுக்காக வளர்ச்சியடைந்த இன்னொரு மொழி இருப்பதும் அவசியம். ஆனால் எமது பிள்ளைகள் மூன்றுவது மொழியொன்றின் பாரத்தைச் சுமக்க முடியாது என்று மந்திரி குறிப்பிட்டார்.

தமிழரசுக்கட்சியின் சார்பில் தாம் பேசுவதாகக் கூறிய மந்திரி, ''நீங்கள் தமிழையும் படிக்க ஒப்புக்கொண்டால் நாங்களும் தாமாகவே படிக்க ஆரம்பிப்போம்'' என்று குறிப்பிட்டார்.

---

செனட்டில்

# விலைக்கட்டுப்பாட்டு விசேஷ மசோதா வாபஸ்

### பாராளுமன்றக்கூட்டத்தொடர் 22-ம்திகதி முடிவடையும்

கொழும்பு, திங்கள்

ஜவுளி விலைக்கட்டுப்பாடு சம்பந்தமாக இன்று செனட் சபையில் சமர்ப்பிக்கப்படவிருந்த விசேஷ மசோதா சமர்ப்பிக்கப்படவில்லை இந்த மசோதா இன்று செனட் சபையில் சமர்ப்பிக்கப்படும் என்று முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தது.

பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர் இம்மாதம் 22-ம் திகதி முடிவடையும் என்று நீதி அமைச்சர் திரு ஏ. எஸ். விஜயமான சபையில் அறிவித்தார். அவர் பேசும்போது வர்த்தகத்தில் மோசடி புரிபவர்களைத் தண்டிப்பதற்காக கொண்டுவரப்படவிருந்தமசோதாவை வாபஸ் பெறுவதாகக் கூறினார். பாராளுமன்றக் கூட்டத்தொடர் இம்மாதம் 22-ம் திகதியுடன் முடிவடைவதால் இம்மசோதா ஆராயப்பட்டு முடிவு மேற்கொள்வது சிரமசாத்தியம் என்றும் அதனால் தாம் மசோதாவை வாபஸ்பெறுவதாகவும் கூறினார்.

அதன்பிறகு ஜனப்பிரதிநிதிகள் சபையில் ஏற்கனவே விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட விலைக்கட்டுப்பாட்டு மசோதா பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. திருச்செல்வம் இம்மசோதாவை சமர்ப்பித்தார். அந்தசமயம் செனட்டர் ஆனந்ததிஸநாயக அடிக்கடி குறுக்கீடுகள் செய்துகொண்டிருந்தார். அவரைப் பல தடவைகள் எச்சரித்த பின்னர் உதவி சபாநாயகர் உட்காரும்படி கட்டளையிட்டார். அதன்பிறகும் செனட்டர் திஸநாயக குறுக்கீடு செய்ததால்மேற்கொண்டும் கடும்நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்று உப சபாநாயகர் எச்சரிக்கை செய்தார்.

#### தமிழரசுக்கட்சி

யு என் பிக்கும்-தமிழரசுக்கட்சிக்கும் போராஸ் வர்த்தகர்கள் உதவி புரிந்துள்ளதாக எதிர்க்கட்சியினர்தெரிவித்துள்ள புகார்களை செனட்டர் திருச்செல்வம் மறுத்தார் அவர் பேசும்போது. முந்திய அரசாங்க மந்திரியொருவர்தான் போராஸ் வர்த்தகர் ஒருவருடன் சேர்ந்துகொண்டு வெளிநாடு சென்றுள்ளார் வங்கி பாலன் சீட்களை பரிசிலனைசெய்தால் குட்டுவெளிப்படும் என்று குறிப்பிட்டார்.

---

உரும்பராய் கொலை வழக்கு

# ஜூரிசபையை கலைத்து புதிய விசாரணைக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், செவ்.

உரும்பராய் கொலை வழக்கில் ஜூரிசபையினர் 4-2-1 ஆகபிரிந்து தீர்ப்பளித்ததை தொடர்ந்து நீதியரசர் ஜூரிசபையை கலைத்து புதிய விசாரணைசெய்ய உத்தரவிட்டார்.

இது ஒரு வேடிக்கையான தீர்ப்பெனக்குறிப்பிட்ட நீதியரசர், இது ஒரு சாதாரண வழக்கென்றும், இப்படியான தீர்ப்பை முதன்முதலாக கேள்விப்படுவதாகவும் தெரிவித்தார்.

ஜூரி சபையினர் சுமார் 100 நிமிடங்கள் தனிமையில் மந்திராலோசனைசெய்தபின் தங்கள் தீர்ப்பைத்தெரிவித்தனர். தீர்ப்பை அறிவதற்காக நேற்றுக்காலை 9-15 மணிக்கு கோர்ட்டிற்குள் இடம் பிடித்துக்கொண்டவர்கள் பிற்பகல் 3-30 மணிவரை காத்திருந்தனர்.

ஏழு பேர்களைக் கொண்ட ஜூரிசபையில் 4 பேர் எதிரி குற்றவாளியென்றும், 2பேர் எதிரி சுற்றவாளியென்றும், ஒருவர் எதிரி கைமோசக் கொலைக் குற்றவாளியென்றும் பிரிந்து தீர்ப்பளித்தனர்.

இத்தீர்ப்பை ஏற்றுக்கொள்ளமுடியாதெனக் குறிப்பிட்ட நீதியரசர் ஜூரிசபையை கலைத்து புதிய விசாரணைக்கு உத்தரவிட்டார்.

இப்படியான தீர்ப்பை, இதற்குமுன் என்றும் கேள்விப்படவில்லையெனக்கூறிய நீதியரசர் இந்த சாதாரண வழக்கிலே ஜூரிசபையினர் ஒரு முடிவிற்கு வரமுடியாமற் போய்விட்டனர் என்றும் கூறினார்.

எதிரி சார்பில் அட்வக்கேட் எஸ். சரவணமுத்து, அட்வக்கேட் ரி. கணேசலிங்கத்தின் உதவியுடனும், புறக்டர் வி. செல்லத்துரையின் அனுசரணையுடனும் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் வி. நடராசா நியமிக்கப்பட்டிருந்தார்.

அசைஸ் விசாரணை மீண்டும் இன்று காலை ஆரம்பாகும்.

---

## முள்ளிப்பற்று கி. ச. தேர்தல் முடிவுகள்

முள்ளிப்பற்று, திங்கள்

முள்ளிப்பற்று கிராமசபையின் கீழ் கூறப்பட்ட வட்டாரங்களுக்கு பிரதிநிதிகளாக பின்வரு 8வார் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

1-ம் வட்டாரம்: வயிரமுத்து நடராசா, 2-ம் வட்டாரம்: அருணசலம் வேலுப்பிள்ளை, 3-ம் வட்டாரம்: முருகேசு அரியகுட்டி, 4-ம் வடடாரம்: ஆறுமுகம் கதிர்காமு, 5-ம் வட்டாரம்: மரியாம்பிள்ளை அல்போன்ஸ், 6-ம் வட்டாரம்: கபிரியேல் மரியாம்பிள்ளை, 7-ம் வட்டாரம்: நல்லதம்பி கார்த்திகேசு, 8-ம் வட்டாரம்; சின்னத்தம்பி சிவசிதம்பரம்.

---

## பாலில் தண்ணீர் கலந்து விற்றவருக்கு ரூ.40 அபராதம்

யாழ்ப்பாணம், செவ்.

பாலில் தண்ணீர்கலந்து விற்ற ஒருவருக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. ரி. ஜே. இராசரத்தினம் ரூபா 40 அபராதம் விதித்தார்

நாயன்மார்கட்டைச் சேர்ந்த சோ. கந்தசாமி என்பவருக்கு எதிரான இந்த வழக்கையாழ்ப்பாணம் மாநகரசபைசார்பில் உணவுப்பரிசோதகர் திரு. எஸ். ஆறுமுகம் நடத்தினார்.

---

## அரியாலையில் கிடந்த சடலம் இன்னும் அடையாளம் தெரியவில்லை

யாழ்ப்பாணம், செவ்வாய்

கடந்த வாரம் அரியாலை என்ற இடத்தில் காணப்பட்ட இனம் தெரியாத சடலம் இப்போது கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது தெரிந்ததே.

இந்தச் சடலம் யாருடையது என்பதைக் கண்டுபிடிப்பதற்கு யாழ்ப்பாணம் பொலிசார் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணம் குற்றப் பிரிவைச் சேர்ந்த சுப்பிரமணியம், தம்பிராசா ஆகியவர்களை இந்தச் சடலம் பற்றிய விபரம் அறிவதற்காக யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் அதிகாரி திரு. மகேந்திரன், நியமித்திருக்கின்றார். இவ்விரு பொலிஸ் உத்தியோகத்தரும் சடலம் கிடந்த பகுதிகளில் சுமார் 50 வீடுகளில் விசாரணை நடத்தியுள்ளனர். இதுவரை எதுவித துப்பும் கிடைக்கவில்லையென்று தெரிகின்றது. இப்பகுதியிலுள்ள சலவைத் தொழிலாளர்களின் உதவியையும் பொலிசார் நாடியுள்ளனர். (ந. நி)

---

## கூரையைப் பிரித்து மதுபானம் திருட்டு

யாழ்ப்பாணம், செவ்.

கஸ்தூரியார் வீதியிலுள்ள மதுபான விற்பனை நிலையம் ஒன்றின் கூரையைப் பிரித்து மதுபானப் போத்தல்களையும் ரொக்கப்பணத்தையும் திருடர்கள் களவாடிச்சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது. கூரையைப் பிரித்துக்கொண்டு உள்ளே இறங்கியுள்ள திருடர்கள் அங்கிருந்த திறப்பைக்கொண்டு கதவைத் திறந்துகொண்டு வெளியேறியிருப்பதாகக் கூறப்படுகின்றது. (ந. நி.)

---


## வரி விளம்பரம்

### தேவை

மைன்டேர்ஸ்

பிளேட்டின் மெஷினில் (Platin machine) வேலைசெய்வதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. அனுபவத்திற்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும். சேமலாபநிதி உண்டு. விண்ணப்பிக்கவும்: 30, பெரியதெரு, யாழ்ப்பாணம் 581


---

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி. 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org